

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 100 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 03 – ஞாயிற்றுக்கிழமை 19 நவம்பர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 100: Thiruvalluvar Year - 2054 - Karthigai 03 - Sunday 19 November 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


# நெருப்பின் பொறிகளே.. நீங்கள்தான் தேவை!



## உங்களில் ஒருவன்

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

'வெல்க நாடு.. வெல்க நாடு.. வெல்க வெல்கவே' என்று 'காஞ்சித் தலைவன்' திரைப்படத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய பாடல் வரிகள், கலிங்கத்துப் பரணி எனும் தமிழ் இலக்கியத்தைப் போன்ற ஓசை நயத்தைக் கொண்டிருக்கும். "வீர சங்க நாதம் கேட்டுப் படைகள் செல்கவே" என்று, அதில் போர்ப் பரணி பாடியிருப்பார் நம் உயிர்நிகர்த் தலைவர்.

திரைப்படக் காட்சியில் கண்ட அந்த எழுச்சியையும் உணர்ச்சியையும் ஜனநாயகக் களத்தில் உருவாக்கியுள்ளது, குமரி முனையிலிருந்து தொடங்கிய கழக இளைஞரணியின் கருப்புசிவப்பு - சீருடையுடன் கூடிய இருசக்கர வாகனப் பேரணி.

முக்கடல் தாலாட்டும் கன்னியாகுமரியில் முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவிய வானுயர அய்யன் திருவள்ளுவர் சிலை வாழ்த்துவது போல, அண்ணல் காந்தியடிகள் மண்டபத்தின் அருகிலிருந்து உரிமைப் போர் முழக்கத்துடன் இந்த இரு சக்கர வாகனப் பேரணியை நவம்பர் 15 அன்று தொடங்கி வைத்திருக்கிறார், இளைஞரணியின் செயலாளரும் - மாண்புமிகு இளைஞர்நலன் - விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சருமான தம்பி உதயநிதி அவர்கள்.

உத்தமர் காந்தியைக் கொன்ற கொடியவன் கோட்சே தூக்கிலிடப்பட்ட நாளில், **கோட்சே வாரிசுகளின் அரசியல் அதிகார அராஜகத்தை எதிர்த்து, தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வாரிசுகளான நம் கழக உடன்பிறப்புகள் உரிமைப் போருக்கான ஆற்றல் மிக்க ஜனநாயகப் படையின் வீரர்களாக இருசக்கர வாகனத்தில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.**

நவம்பர் 15-ஆம் நாள் குமரி முனையில் தொடங்கிய இந்தப் பேரணி, தென் மாவட்டங்களை உள்ளடக்கிய வள்ளுவர் மண்டலத்திலும், மேற்கு மாவட்டங்களை உள்ளடக்கிய பெரியார் மண்டலத்திலும், வடமாவட்டங்களை உள்ளடக்கிய அண்ணா மண்டலத்திலும், காவிரிப் படுகை மாவட்டங்களை உள்ளடக்கிய கலைஞர் மண்டலத்திலுமாக 234 தொகுதிகளுக்கும் 13 நாட்களில் சென்று, மொத்தமாக 8 ஆயிரத்து 647 கிலோ மீட்டர் பரப்புரைப் பயணம் மேற்கொண்டு நவம்பர் 27ஆம் நாள் சேலத்தில் நிறைவடைகிறது.

அந்த சேலத்தில்தான் டிசம்பர் 17-ஆம் நாள் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு - மாநில உரிமை மீட்பு மாநாடாக எழுச்சிமிக்க இளையோரின் புதுப் பாய்ச்சலுடன் நடைபெறவிருக்கிறது. அதே சேலத்தில், 1944-ஆம் ஆண்டு பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நடத்திய மாநாட்டில், பேரறிஞர் அண்ணா முன்மொழிந்த 'அண்ணாதுரை தீர்மானம்' வாயிலாக 'திராவிடர் கழகம்' என நம் தாய்க் கழகத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது. அந்தக் கழகத்தின் கொடியை உருவாக்கும் போது, கருப்பு நிறத்தின் நடுவே, தன் குருதியால் சிவப்பு வட்டம் வரைந்து கொள்கை உணர்வை வெளிப்படுத்தியவர், நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர்.

> **தாய்க் கழகத்திற்குப் பெயர் சூட்டப்பட்ட சேலம் மாநகரில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கும் நிலையில், உங்களில் ஒருவனான நான் ஒரு தாயின் மனநிலையுடன் காத்திருக்கிறேன். இன்று கழகத்தின் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக உங்களின் பேரன்புடன் பொறுப்புகளை வகித்தாலும், ஏறத்தாழ 35 ஆண்டுகள் கழக இளைஞரணியைச் சுமந்தவனல்லவா! அது பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, உயர்ந்து நிற்கும் காலம் வரை அதன் வளர்ச்சி ஒன்றே என் சிந்தனையாக, செயல்பாடாக அமைந்தது.**

**தாய்க் கழகத்திற்குப் பெயர் சூட்டப்பட்ட சேலம் மாநகரில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கும் நிலையில், உங்களில் ஒருவனான நான் ஒரு தாயின் மனநிலையுடன் காத்திருக்கிறேன். இன்று கழகத்தின் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக உங்களின் பேரன்புடன் பொறுப்புகளை வகித்தாலும், ஏறத்தாழ 35 ஆண்டுகள் கழக இளைஞரணியைச் சுமந்தவனல்லவா!** அது பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, உயர்ந்து நிற்கும் காலம் வரை அதன் வளர்ச்சி ஒன்றே என் சிந்தனையாக, செயல்பாடாக அமைந்தது.

1949 - ஆம் ஆண்டு சென்னை ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கி வைத்தார் பேரறிஞர் அண்ணா. அப்போது அவரும் அவரது தம்பிமார்களான தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர், நாவலர் ஆகியோர் உள்ளிட்ட அனைவருமே இளைஞர்கள்தான். அவர்கள் அரசியல் களத்தில் வேகத்துடனும் வியூகத்துடனும் செயல்பட்ட காரணத்தால், 18 ஆண்டுகளில் தி.மு.க. தமிழ்நாட்டில் ஆட்சி அமைத்தது.

இளைஞர்கள், மாணவர்கள் பங்கேற்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி 30 ஆண்டுகள் கடந்த நிலையில், புதிய இளைஞர்களால் இயக்கத்திற்குப் புது ரத்தம் பாய்ச்சும் வகையில்தான் 1980-ஆம் ஆண்டு ஜூலை 20-ஆம் நாள் மதுரை ஜான்சிராணி பூங்காவில் கழகத்தின் இளைஞரணியைத் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

## உங்களில் ஒருவன்

இராபின்சன் பூங்காவில் தொடங்கிய இயக்கத்தின் தொடர்ச்சிதான் ஜான்சி ராணி பூங்காவில் உருவான இளைஞரணி. **"விருப்பமுள்ளவராம் பதவியில் பல பேர்... அவர் வேண்டாம்! நெருப்பின் பொறிகளே! நீங்கள்தாம் தேவை!' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தன் 21-ஆம் வயதில் இளைஞராக இருந்தபோது எழுதிய கவிதை வரிகளுக்கேற்ப, கழகத்தின் துணை அமைப்பாகவும், எந்த நெருக்கடியிலும் துணை நிற்கும் அமைப்பாகவும் திகழ்ந்தது இளைஞரணி. தலைவர் கலைஞர் ஆணையிட்டால் ஏவுகணை போல எதிரிக் கூட்டம் நோக்கிப் பாயும் பட்டாளமாக இளைஞரணி செயல்பட்டது.**

"ஈட்டியின் முனைகளே.. எழுங்கள்! தீட்டிய கூர்வாட்களே... திட்டமிதோ! கட்டிய நாய்களல்ல நாம்.. எட்டிய மட்டும் பாய்வதற்கு! தட்டிய மாத்திரத்தில் கொட்டம் அடங்க வேண்டும்!" என்ற அவரது கவிதை வரிகளுக்கு நிகராக இளைஞரணியின் பணிகள் தொடங்கின, தொடர்ந்தன.

முதலில் ஐந்து பேர் கொண்ட அமைப்புக்குழுவுடன் உருவாகி மாவட்டம், ஒன்றியம், நகரம் என அனைத்து நிலைகளிலும் அமைப்புகளை உருவாக்கிய இளைஞரணியின் செயலாளராக 1982-இல் உங்களில் ஒருவனான என்னை நியமித்தது கழகத் தலைமை. அணியின் மாநிலத் துணை அமைப்பாளர்களாக திருச்சி சிவா அவர்கள், தாரை கே.எஸ்.மணியன் அவர்கள், வாலாஜா அசேன் அவர்கள் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் அப்போது எதிர்க்கட்சியாக இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும், மக்கள் மனதில் தமிழினத் தலைவராகவும் வீற்றிருந்தார். **தமிழ்நாட்டின் அரசியல் சக்கரத்தைச் சுழற்றும் அச்சாணியாகத் தலைவர் கலைஞர் திகழ்ந்தார். அவர் ஆணையிட்டால் போதும், அரை நாள் அவகாசத்தில் பல இலட்சம் பேர் குவிந்து விடுவார்கள். ஊர்வலமா, கண்டன ஆர்ப்பாட்டமா, மறியலா, மாநாடா - எதுவாக இருந்தாலும் அந்த இலட்சம் பேரில் இலட்சியப் படை வீரர்களாக இளைஞரணியின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும்.** இலங்கைத் தமிழர் உரிமை காக்கும் போராட்டம், இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற போராட்டம், ஆளுங்கட்சியின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாத போராட்டம் எனக் கழகம் முன்னெடுக்கும் களங்களில் இளைஞரணி முனைப்புடன் பங்கேற்கும்.

**'வெட்டி வா என்றால் கட்டி வரக் கூடியவர்கள் என் உடன்பிறப்புகள்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார்கள். இளைஞரணி எனும் கொள்கைப் படை வெட்ட வேண்டியதை வெட்டி, அவற்றை முறையாகக் கட்டி, வீச வேண்டிய இடத்தில் வீசிவிட்டு, கடமையை நிறைவேற்றிய வீரர்களாகத் தலைவர் கலைஞர் முன் நிற்கும்.** எத்தனை மறியல்கள், எண்ணற்ற சிறைவாசங்கள். அத்தனையையும் கொள்கையை வளர்ப்பதற்கான அனுபவ உரமாக ஆக்கிக் கொண்டது இளைஞரணி.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் பயணித்து திராவிடக் கொள்கைகளை விதைத்து, நீர் வார்த்து, வளர்த்தவர்கள். அந்த உணர்வை அடுத்த தலைமுறையிடம் ஊட்ட வேண்டும் என்பதற்காகவும், இளைஞரணியின் தலைமை அலுவலகமாக 'அன்பகம்' கட்டடத்தைப் பெறுவதற்கான நிதி திரட்டவும் தமிழ்நாடு முழுவதும் உங்களில் ஒருவனான நான் பயணித்தேன். இளைஞரணியின் துணை அமைப்பாளர்கள் துணை வருவார்கள். கிளைகள்தோறும் கழகத்தின் இருவண்ணக் கொடியேற்றம், படிப்பகங்கள் திறப்பு, கழகத்தினர் வீட்டில் தேநீர் அருந்தி மகிழ்தல், குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுதல், பொதுக் கூட்டம் என ஒவ்வொரு நிகழ்வுமே கொள்கை விளக்கமாக அமையும். ஒவ்வொரு நிகழ்விலும் நிதி திரட்டப்படும். அப்படித் திரட்டிய நிதியில்தான், கழகத்தின் பொதுச் செயலாளராகத் திகழ்ந்த இனமானப் பேராசிரியர் அவர்கள் - இளைஞரணி, தொ.மு.ச., சென்னை மாவட்டக் கழகம் ஆகியோருக்கிடையே வைத்த ஆரோக்கியமான போட்டியில், அவர் நிர்ணயித்த பத்து இலட்ச ரூபாய் என்ற இலக்கைக் கடந்து, 11 இலட்ச ரூபாயை நிதியாகத் திரட்டி, தலைமையிடம் அளித்து அன்பகத்தை வசமாக்கியது இளைஞரணி. அன்பான இதயங்கள் கொண்ட தமிழ்நாட்டு மக்களும் நம் வசமாயினர்.

எத்தனையெத்தனை நினைவுகளோ நெஞ்சத்தில் சுழல்கின்றன. **தான் வளர்த்த பிள்ளை, தன் தோளுக்கு மேல் வளர்ந்து, தானே தன் கடமைகளை முனைப்புடனும் சிறப்புடனும் நிறைவேற்றும் ஆற்றலைப் பார்த்து மகிழும் தாயின் மனநிலையுடன், தம்பி உதயநிதியையும் அவர் தலைமையிலான இளைஞரணியில் உள்ள ஒவ்வொருவரின் செயலாற்றலையும் கண்டு மகிழ்கிறேன்.**

> **அரசியல் மாண்புகளையோ மாநில உரிமைகளையோ மதிக்காத ஒன்றிய ஆட்சியாளர்களால் இந்திய அரசியலமைப்புச் சட்டமே ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும்கூட மதிக்காத நியமனப் பதவிக்காரர்களின் அடாவடிகள், கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைக்கின்றன. மதவாத - மொழி ஆதிக்க - மானுட விரோத அரசியல் ஒவ்வொரு மாநில மக்களையும் நடுங்கச் செய்கிறது.**

மாநாடு சிறக்க தாயுள்ளத்துடன் வாழ்த்துவதுடன், தாய்ப் பாசத்துடன் சில அறிவுரைகளை மாநாடு நடைபெறும்வரை அவ்வப்போது இத்தகைய மடல் வாயிலாக வழங்குவேன்.

**அரசியல் மாண்புகளையோ மாநில உரிமைகளையோ மதிக்காத ஒன்றிய ஆட்சியாளர்களால் இந்திய அரசியலமைப்புச் சட்டமே ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும்கூட மதிக்காத நியமனப் பதவிக்காரர்களின் அடாவடிகள் கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைக்கின்றன. மதவாத - மொழி ஆதிக்க - மானுட விரோத அரசியல் ஒவ்வொரு மாநில மக்களையும் நடுங்கச் செய்கிறது. இவை எல்லாவற்றுக்கும் எதிரான நல்ல தீர்ப்பை 2024-ஆம் ஆண்டில் மக்கள் எழுதப் போகிறார்கள்.** அதற்கான விழிப்புணர்வுப் பரப்புரைதான் இளைஞரணி மேற்கொண்டிருக்கும் இரு சக்கர வாகனப் பேரணி.

கருப்பு-சிவப்பு இளைஞர் படை மக்களிடம் செல்லட்டும்!. மாநில உரிமைகள் பறிக்கப்படுவதால் 'நீட்' தேர்வு போன்ற கொடூரங்கள் எத்தனை உயிர்களைப் பறித்துள்ளன என்பதை எடுத்துச் சொல்லட்டும்! நீட் விலக்கிற்கான அரைக் கோடி கையெழுத்துகளைப் பெறட்டும்! ஜனநாயகப் போர்க்களத்தில் வெல்லட்டும்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
கார்த்திகை 01
17-11-2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 19-11-2023

# எடியூரப்பா மகனை நியமித்தது யார்?

**வாரிசு அரசியல் - இது ஒன்றுதான் பா.ஜ.க. கையில் இருக்கும் ஒரே ஆயுதம். பிரதமர் மோடி - உள்துறை அமைச்சர் அமித்ஷா - பா.ஜ.க. தலைவர் நட்டா என யாராக இருந்தாலும் அவர்களுக்கு காங்கிரசு கட்சி முதல் தி.மு.க. வரை குறை சொல்வதற்காக வைத்திருக்கும் ஒரே ஒரு மொண்ணைக் கத்தி அது ஒன்றுதான்.**

“இந்தியாவில் வாரிசு அரசியல் ஒரு நோய். இதில் இருந்து கட்சிகள் குணமாக வேண்டும்” என்று எல்லாக் கூட்டங்களிலும் கையைத் தூக்கிக் கொண்டு இருக்கிறார் பிரதமர் மோடி. இரண்டு நாட்களுக்கு முன்புகூட சட்டீஸ்கரில் பேசிய பிரதமர் மோடி, “வாரிசு அரசியலால் காங்கிரசு கட்சி மீது மக்கள் கோபமாக இருக்கிறார்கள்” என்று கண்டுபிடித்திருக்கிறார்.

கடந்த வாரம் போபாலில் உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசும்போது, “காங்கிரசுத் தலைவர்கள் தங்களின் வாரிசுகளுக்காக மட்டுமே அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்” என்று கர்ஜித்திருக்கிறார். “மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசுத் தலைவர்கள் கமல்நாத், திக்விஜய் சிங் போன்றவர்களுக்கு தங்கள் மகனை முதல்வராக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. சோனியா காந்தி, தனது மகன் ராகுல் காந்தி பிரதமராக வேண்டும் என்று விரும்புகிறார். அவர்களின் அரசியல் இதனை நோக்கியே உள்ளது. ஆனால் பிரதமர் மோடி, நாட்டு மக்களின் நலனுக்காகப் பணியாற்றி வருகிறார். பா.ஜ.க. மக்களுக்கான கட்சியாக உள்ளது” என்று திருவாய் மலர்ந்தார். “இந்தியாவில் வாரிசு அரசியல்தான் ஆபத்தில் இருக்கிறது” என்று பேசுவதை வழக்கமாக வைத்திருக்கிறார் அமித்ஷா.

கடந்த மார்ச் மாதம் கிருஷ்ணகிரிக்கு வந்த பா.ஜ.க. தேசியத் தலைவர் நட்டா, “தமிழ்நாட்டில் குடும்ப ஆட்சி நடக்கிறது” என்றும், “வாரிசு அரசியல் இல்லாத ஒரே கட்சி பா.ஜ.க.தான்” என்றும் சொல்லிச் சென்றார். இவை அனைத்தையும் படித்து விட்டு இந்தச் செய்தியையும் படியுங்கள்...

‘கர்நாடக பா.ஜ.க. தலைவராக எடியூரப்பாவின் மகன் விஜயேந்திரா நியமனம்” - என்பதுதான் அந்தச் செய்தி. எடியூரப்பா மகனை கர்நாடக பா.ஜ.க. தலைவராக நியமித்தது யார்? வாரிசு அரசியல் வடை சுட்டுக் கொண்டு இருக்கும் அதே மோடி - அமித்ஷா - நட்டா கூட்டணிதான். இவர்கள் கட்டுப்பாட்டில்தானே கர்நாடக பா.ஜ.க. இருக்கிறது? அல்லது கர்நாடக பா.ஜ.க.வுக்கு வேறு பிரதமர், வேறு உள்துறை அமைச்சர், வேறு தேசியத் தலைவர் இருக்கிறார்களா? இந்த மூவருக்குமே தெரியாமல் நியமனம் நடந்துவிட்டதா?

‘வாரிசு அரசியலை’ எதிர்க்கும் இந்த மூவரும் நடத்திய வாரிசு நாடகத்தை எடியூரப்பாவே அம்பலப்படுத்திவிட்டார். “எனது மகனை மாநிலத் தலைவராக ஆக்கும்படி நான் மேலிடத்தில் எப்போதும் கோரிக்கை வைத்தது இல்லை” என்று பேட்டி தந்துள்ளார் எடியூரப்பா. அப்படியானால் யார் இதனைச் செய்தது? இதோ எடியூரப்பாவே சொல்கிறார்...

“எனது மகன் விஜயேந்திரா, கர்நாடக பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்படுவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. இந்த முடிவை பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பா.ஜ.க. தேசியத் தலைவர் நட்டாவும்தான் எடுத்துள்ளார்கள். இதில் எனது தலையீடு எதுவுமில்லை.” என்று சொல்லி இருக்கிறார் எடியூரப்பா.

**எடியூரப்பாவின் மகன் விஜயேந்திராவை உச்சிமுகர்ந்து தலைவர் ஆக்கியவர் அமித்ஷாதான். கடந்த மார்ச் மாதம் எடியூரப்பா வீட்டுக்கு வந்தார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. அப்போது அமித்ஷாவுக்கு எடியூரப்பா பூங்கொத்து வழங்கினார். அந்தப் பூங்கொத்தை விஜயேந்திராவிடம் கொடுக்கச் சொன்னார் அமித்ஷா. உடனே பூங்கொத்து எடியூரப்பாவிடம் இருந்து விஜயேந்திரா கைக்குப் போனது. விஜயேந்திரா அந்தப் பூங்கொத்தை அமித்ஷாவிடம் கொடுத்தார். அமித்ஷா அதனை வாங்கிக் கொண்டார். விஜயேந்திராவைத் தட்டிக் கொடுத்தார் அமித்ஷா. இதுதான் வாரிசு அரசியலுக்கு எதிராக மக்கள் அரசியல் நடத்துபவர்களின் லட்சணம்!**

எடியூரப்பாவின் மகனைக் கொண்டுவருவதற்கான திட்டம் அப்போதே வந்துவிட்டது. ஆனால் அதனை கர்நாடக பா.ஜ.வி.னர் ஏற்க மாட்டார்கள் என்பதால் தயங்கியது பா.ஜ.க. தலைமை. கர்நாடக சட்டசபைத் தேர்தலில் மண்ணைக் கவ்வியது பா.ஜ.க.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி அடைந்ததால் அக்கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த நளின்குமார் கட்டீல் கடந்த மே மாதம் தனது பதவியை விட்டு விலகினார்; இதையடுத்து தலைவர் பதவியைக் கைப்பற்ற மூத்த தலைவர்கள் சோமண்ணா, ஆர்.அசோகா, சுரேஷ்குமார், ரமேஷ் ஜிகாஜிநாகி, சி.டி.ரவி, ஷோபா கரந்தலாஜே உள்ளிட்டோர் போட்டிபோட்டனர்.

அதிலும் முன்னாள் அமைச்சர் சோமண்ணா, “எனக்கு மாநிலத் தலைவர் பதவி வழங்கினால் சிறப்பாகச் செயல்படுவேன். கட்சி மேலிடத்தின் உத்தரவின்பேரிலே 2 தொகுதிகளில் போட்டியிட்டேன். நான் தோல்வி அடைந்ததற்கு அதுவும் ஒரு காரணம் ஆகும். கட்சி மேலிடம் எனக்கு வேறு பொறுப்புகளை வழங்கும் என நம்புகிறேன்” என வெளிப்படையாகவே தெரிவித்தார். ஆனால் இவர்கள் அனைவரையும் ஏமாற்றினார்கள் மோடி - அமித்ஷா - நட்டா அணி.

இதுகுறித்து சி.டி.ரவி, “கட்சி மேலிடத்தின் இந்த முடிவு குறித்து எனக்கு சில கேள்விகள் இருக்கின்றன. அவற்றை ஊடகங்களில் வெளிப்படையாக விவாதிக்க முடியாது” என அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். இதேபோல முன்னாள் அமைச்சர் ரமேஷ் ஜிகாஜிநாகி, “பா.ஜ.க.வில் தலித்துகளுக்கு முக்கியத்துவம் கிடையாது. செல்வந்தர்களுக்கும், சாதி செல்வாக்கு கொண்டவர்களுக்குமே வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்த மோசமான நிலை என்றைக்கு மாறுமோ?” என விமர்சித்துள்ளார். முன்னாள் அமைச்சர் சோமண்ணா, அதிருப்தி காரணமாக பா.ஜ.க.வை விட்டு விலக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடக சட்டசபைத் தேர்தல் முடிவடைந்து 7 மாதங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால் கர்நாடக மாநில சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்கு என முடிவு செய்ய முடியாத அளவுக்கு கர்நாடக பா.ஜ.க.வில் கோஷ்டிப் பூசல் உச்சகட்டமாக உள்ளது. இதேபோல சட்டசபைத் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று நளீன் குமார் கட்டீல், பா.ஜ.க. மாநிலத் தலைவர் பதவியை ராஜினாமா செய்து ஆறு மாதம் கழித்துதான் தலைவர் பதவிக்கு ஆளைப் போட வேண்டிய நிலைமையில் இருக்கிறது பா.ஜ.க. எடியூரப்பாவின் மகனைத்தான் அவர்களால் நியமிக்க முடிந்தது. விஜயேந்திராவின் பதவி ஏற்பு விழாவை பெரும்பாலான பா.ஜ.க. தலைவர்கள் புறக்கணித்திருக்கிறார்கள்.

**மாநில மக்கள் தொகையில் லிங்காயத்துகள் 17 சதவிகிதம். அவர்களைத் திருப்திப்படுத்தவே லிங்காயத்து இனத்தைச் சேர்ந்த விஜயேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார். ‘யாரையும் திருப்திப்படுத்தும் அரசியல் செய்ய மாட்டோம்’ என்று எல்லா மேடைகளிலும் சொல்லும் பிரதமர் மோடி, அதைத்தான் கர்நாடகாவில் செய்துள்ளார். வாரிசு அரசியல் செய்ய மாட்டோம் என்று சொல்லி வந்தார்கள். அதைத்தான் தொடர்ந்து செய்து வருகிறார்கள். சொன்னதற்கு மாறாகச் செய்தால்தானே அது பா.ஜ.க.?!**



தமிழ் திரையுலகம் சார்பில் நடைபெறவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர்100 விழாவிற்கு நேரில் வந்து சிறப்பிக்குமாறு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களை தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.ராமசாமி, செயலாளர் ஆர்.ராதாகிருஷ்ணன், நடிகர் சங்க பொருளாளர் கார்த்தி, துணைத் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் விழா குழு சார்பில் நேரில் சென்று அழைத்தனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் - பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் வென்ற

# விளையாட்டு வீரர்களுக்கு ரூ.60.18 இலட்சம் ஊக்கத் தொகை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, நவ.19-*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து ரூ.60.18 இலட்சம் உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகையினை பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில் பங்குபெற்று பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கும், பங்கேற்கவுள்ள வீரர், வீராங்கனைகளுக்கும் வழங்கினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு:-

தாய்லாந்தில் 01.12.2023 முதல் 09.12.2023 வரை நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உலகத்திறன் விளையாட்டுப் போட்டியில் (IWAS THAILAND) தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொள்ளவுள்ள 24 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக் கட்டணம், உள்ளூர் போக்குவரத்துக் கட்டணம், விசா செலவுகள் மற்றும் சீருடை செலவினம் ஆகியவற்றுக்கான செலவினத் தொகைக்காக “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து ரூ.38.40 இலட்சத்திற்கான காசோலைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் சீனாவில் 18.10.2023 முதல் 31.10.2023 வரை நடைபெற்ற 19வது ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் வென்ற வீரர் ஆ.குஹன்வசந்த் அவர்களுக்கு ரூ.2.00 இலட்சத்திற்கான காசோலையினையும், உத்திரப்பிரதேசம் மாநிலம், லக்னோவில் 23.03.2023 முதல் 26.03.2023 வரை நடைபெற்ற 5வது தேசிய பாரா பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொண்டு தங்கப் பதக்கங்கள் வென்ற நித்யஶ்ரீ மற்றும் சிவராஜன் சோலைமலை, வெள்ளிப் பதக்கங்கள் வென்ற ருத்திக் ரகுபதி, சந்தியா விஷ்வநாதன் மற்றும் நவீன் சிவகுமார், வெண்கலப் பதக்கங்கள் வென்ற நீரஜ்குமார் சீனிவாசன், எம்.எஸ்.சுதர்சன் மற்றும் டி. பிரித்விராஜ் ஆகிய 8 வீரர், வீராங்கனைகளுக்கு “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து தலா ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.16 இலட்சத்திற்கான காசோலைகளையும் ஊக்கத் தொகையாக வழங்கினார்.

மேலும், ஆஸ்திரேலியா, மெல்போர்னில் 02.11.2023 முதல் 12.11.2023 வரை நடைபெற்ற ஆசிய ஓசியானியா சாம்பியன்ஷிப் 2023 போட்டியில் கலந்து கொண்ட தமிழ்நாடு செரிப்ரல்பால்சி வீரர்களான பாண்டியராஜன் மற்றும் ஜோஷ்வா ஆண்ட்ரூஸ் ஆகியோருக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக் கட்டணம், உள்ளூர் போக்குவரத்துக் கட்டணம், விசா செலவுகள் ஆகியவற்றுக்கான செலவினத் தொகைக்காக “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து தலா ரூ.1.89 இலட்சத்திற்கான காசோலைகளை உதவித்தொகையாக வழங்கினார்.

இதுவரை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.5 இலட்சம் உட்பட மொத்தம் 70 தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகள் மூலம் நன்கொடையாக பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ.21.06 கோடி நிதி “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை”க்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் 228 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகையாகவும், ஊக்கத்தொகையாகவும் ரூ.4.64 கோடி நிதி விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### எஸ்.இந்திரன் தலைமையில்

# தாம்பரம் 5-வது மண்டல மாமன்ற கூட்டம்!

*தாம்பரம், நவ.19-*

தாம்பரம் மாநகராட்சி 5-வது மண்டலத்தில் மாமன்ற கூட்டம் நேற்று முன்தினம் பகல் மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் தலைமையில் மாநகராட்சி அதிகாரிகளின் மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் 33 கோரிக்கைகளை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் அ.தி.மு.க.வை சேர்ந்த எதிர்க்கட்சி தலைவர் சங்கர் வெளியே வந்து பத்திரிகை தொலைக்காட்சிக்கு கழக ஆட்சியை கண்டித்து பேட்டி கொடுத்தார்.

இதனை கண்டித்து கழக மாமன்ற உறுப்பினர்களும், கழக நிர்வாகிகளும் தமிழக முதல்வர் வாழ்க! வாழ்க!! என்று கோஷங்களை எழுப்பி அவரை கோரோ செய்து எழுச்சி முழக்க மிட்டதை தொடர்ந்து அவர் மண்டல அலுவலகத்தில் இருந்து வெளியேறினார்.



### செய்யார் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க எதிரான போராட்டத்தில்

# கைதான 6 பேரின் குண்டர் தடுப்புச் சட்டம் ரத்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 19–

செய்யார் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கு எதிரான வன்முறைப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 6 பேர் மீது போடப்பட்ட குண்டர் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டத்தில் முதற்கட்டமாக 645 ஹெக்டேர் பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா துவங்கப்பட்டது. தற்போது, இதில் 13 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 27,432 நபர்கள் நேரடியாகவும், 75,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இதே பகுதியில் இரண்டாம் கட்டமாக 2300 ஹெக்டேர் பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டது. தற்போது, இதில் 55 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 31,645 நபர்கள் நேரடியாகவும், 1,00,000 நபர்கள் மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரிய அளவில் தொழிற்சாலைகள் ஏதுமில்லாத நிலையில், மேற்குறிப்பிட்ட சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்பட்டதன் விளைவாக, செய்யார் மற்றும் வெம்பாக்கம் ஆகிய வட்டங்களை சேர்ந்த அதிக அளவிலான மக்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். குறிப்பாக, பல கிராமங்களைச் சார்ந்த அடிதட்டு மக்களுக்கும், மகளிருக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தொழிற்பூங்கா அமைக்கப்பட்டதன் காரணமாக, இப்பகுதியைச் சேர்ந்தவர்களின் குடும்பங்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட சிப்காட் தொழிற்பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டதன் விளைவாகவும், இப்பகுதியில் சிப்காட் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று பெருமளவிலான பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலும், சிப்காட் பகுதி–3 தொழிற்பூங்காவினை அமைக்கும்பொருட்டு, உரிய ஆணைகள் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டன. இதில் செய்யார் வட்டத்தில், மேல்மா மற்றும் அதனை சுற்றியுள்ள 8 கிராமங்களில் உள்ள 3,174 ஏக்கர் அளவிற்கு நிலஎடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நில எடுப்பு செய்ய உத்தேசித்துள்ள 3,174 ஏக்கர் பரப்பில், 7 ஏக்கர் மட்டுமே நஞ்சை நிலமாகும்.

தற்போது, 1,200 ஏக்கர் அளவிற்கு நிலஎடுப்பிற்கான அறிவிப்பு மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. இதில் நஞ்சை நிலம் ஏதுமில்லை. மேலும், அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டதில், நில எடுப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள, 1881 நில உரிமையாளர்களில், 239 நில உரிமையாளர்கள் மட்டுமே ஆட்சேபணை மனுக்களை அளித்துள்ளனர். சிப்காட் விரிவாக்கத்தின் மூலம் இப்பகுதியில் தொழில் வளர்ச்சி பெருகுவதோடு, அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்ற நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், செய்யார் வட்டம், மேல்மா கிராமத்தில் உள்ள பட்டா நிலத்தில், தேத்துறை கிராமத்தை சேர்ந்த மேல்மா சிப்காட் விவசாயிகள் எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பச்சையப்பன் என்பவர் தலைமையில், தென்னங்கீற்று கொட்டகை அமைத்து, கடந்த 02.07.2023–ஆம் தேதி முதல் தினசரி சுமார் 15 முதல் 20 நபர்களை கொண்டு தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தி வந்தனர்.

அரசு அதிகாரிகளை பணி செய்யவிடாமல் தடுத்தது, அடிக்கடி சாலை மறியலில் ஈடுபட்டு பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது, நில எடுப்பு செய்ய தானாக முன்வந்து சம்மதம் தெரிவித்த விவசாயிகளைத் தடுத்து நிறுத்தியது, பணி செய்த காவலர்களை தாக்கியது, பொது உடமைகளை சேதப்படுத்தியது உள்ளிட்ட பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டதன் காரணமாக, கடந்த 04.11.2023 அன்று மேல்மா சிப்காட் விவசாயிகள் எதிர்ப்பு இயக்க நிர்வாகி கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அருள் மற்றும் 19 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டனர்.

இதில் ஏற்கெனவே அதிக வழக்குகளில் தொடர்புடைய, அருள் மற்றும் 6 நபர்களை திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிந்துரையின் பேரில், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரால் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

செய்யார் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இந்த நில எடுப்பு வருவதால், குண்டர் சட்டத்தின் கீழ் கைதான பச்சையப்பன், தேவன், சோழன், திருமால், மாசிலாமணி மற்றும் பாக்கியராஜ் ஆகியோரின் குடும்பத்தினர் செய்யார் சட்டமன்ற உறுப்பினரை நேற்று முன்தினம் (17–11–2023) நேரில் சந்தித்து, மேற்படி நபர்களை விடுவிக்க கோரிக்கை வைத்தனர். மாலை, கைது செய்யப்பட்ட நபர்களின் குடும்ப உறுப்பினர்கள் செய்யார் சட்டமன்ற உறுப்பினருடன் வந்து, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, தங்களது கோரிக்கை மனுவை அளித்தனர்.

இவர்கள் அளித்த மனுக்களில், வருங்காலங்களில் இது போன்று அரசு திட்டங்களைக் காரணமில்லாமல் எதிர்க்க மாட்டோம் என்றும், இத்தகைய தவறுகளை வெளியாட்களின் தூண்டுதலின் பேரில் செய்துவிட்டோம் என்றும், இனி வருங்காலங்களில் இது போன்ற தவறுகளைச் செய்ய மாட்டோம் என்றும் தெரிவித்து, தங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் தங்கள் குடும்ப உறுப்பினர்களை விடுவிக்குமாறும் கோரிக்கை வைத்தனர். பொதுப்பணித் துறை அமைச்சர், அவர்களின் கோரிக்கை மனுக்களை முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்யார் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டு, சட்டம்–ஒழுங்கிற்கு குந்தகம் விளைவித்து, பொதுச் சொத்திற்கு சேதம் விளைவித்ததன் காரணமாக, குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பச்சையப்பன், தேவன், சோழன், திருமால், மாசிலாமணி மற்றும் பாக்கியராஜ் ஆகியோர் குடும்பத்தினரின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, அவர்களை குண்டர் தடுப்புச் சட்ட நடவடிக்கையிலிருந்து விடுவிக்க ஆணையிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள 6 நபர்களின் மேல் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த குண்டர் தடுப்புச் சட்ட ஆணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### 'போன் பே' செயலியில் மூலம் இனி

## மெட்ரோ ரெயில் டிக்கெட் வசதி!




சென்னை, நவ.19-

போன்பே செயலி மூலம் மெட்ரோ ரயில் டிக்கெட் பெறும் வசதியை மெட்ரோ நிர்வாகம் நேற்று முன்தினம் அறிமுகம் செய்துள்ளது.

சென்னையில் அலுவலகம் செல்வோர், கல்லூரி மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் என நாளொன்றுக்கு 2 லட்சத்துக்கும் அதிகமானோர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்து வருகின்றனர்.

தொடர்ந்து, மெட்ரோவில் பயணிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. மேலும் பயணிகளை ஈர்க்கும் வகையில் மெட்ரோ நிர்வாகம் பல்வேறு சலுகைகளை அறிமுகம் செய்து வருகிறது.

அந்த வகையில், போன்பே செயலி மூலம் மெட்ரோ டிக்கெட் பெறும் வசதியை மெட்ரோ நிர்வாகம் நேற்று முன்தினம் அறிமுகம் செய்துள்ளது.

ஒருமுறை முன்பதிவு செய்யும்போது அதிகபட்சம் 6 டிக்கெட் வரை எடுத்துக்கொள்ளலாம் என்றும் 20% கட்டண தள்ளுபடி வழங்கப்படும் என்றும் சென்னை மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

பேடிஎம், வாட்ஸ் அப் மூலம் டிக்கெட் ஏற்கெனவே பெற்று வந்த நிலையில் தற்போது போன் பே செயலி மூலம் டிக்கெட் பெறும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

### வங்கக் கடலில் உருவான

## மிதிலி புயல் கரையைக் கடந்தது!

சென்னை, நவ.19-

வடமேற்கு வங்கக் கடலில் உருவான மிதிலி புயல் கரையைக் கடந்ததாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

20 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்த மிதிலி புயல் வங்கதேசம் அருகே கரையைக் கடந்ததாக வானிலை மையம் தகவல்

மிதிலி புயல் வடக்கு வடகிழக்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்த

# விழுப்புரம் இளைஞர் அராஜகன் கலியமூர்த்தி உடலுக்கு மரியாதை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் அஞ்சலி!

சென்னை, நவ.19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (17.11.2023) சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் விபத்தினால் மூளைச்சாவு அடைந்த விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த அராஜகன் கலியமூர்த்தி (26 வயது) என்கின்ற இளைஞரின் திருவுடலுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

விழுப்புரம் மாவட்டம், கிருஷ்ணாநகர் பகுதியைச் சார்ந்த 26 வயது இளைஞர் அராஜகன் கலியமூர்த்தி என்பவர் மூளைச்சாவு அடைந்ததையொட்டி சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் முதல்வர்கள் உள்ளிட்ட மருத்துவர்கள் அவர்களுடைய குடும்பத்தினரை அணுகி உடல் உறுப்பு தானம் பற்றிய எடுத்துச் சொன்னதன் காரணமாக அவரது குடும்பத்தினர்கள் விருப்பம் தெரிவித்து அவரது உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டிருக்கிறது. பெறப்பட்ட உடலுறுப்புகளை பொறுத்தவரை அனைத்து உடலுறுப்புகளும் தமிழ்நாடு அரசின் மருத்துவமனைகளுக்கே தந்து, பலருக்கு மறுவாழ்வு கிடைக்கப்பெற்றிருக்கிறது. குறிப்பாக சிறுநீரகத்தினை சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கும், இதயம் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கும், கல்லீரல் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கும் தரப்பட்டிருக்கிறது. கண்விழிகள் எழும்பூர் அரசு கண் மருத்துவமனைக்கு தரப்பட்டிருக்கிறது. இறந்தவருடைய தந்தை அரசு அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று தற்சமயம் விவசாயம் பணி செய்து வருகிறார். அவரது தாய் தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவர்களுடைய முழு விருப்பத்தின்பேரில் உடலுறுப்புகள் தானம் பெறப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் 23ந்தேதி உடலுறுப்பு தானம் செய்வோரின் திருவுடலுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கு பிறகு நடைபெற்ற முதல் மூளைச்சாவு தேனி மாவட்டம், சின்னமனூர் என்கின்ற கிராமத்தில் நடைபெற்ற நிகழ்விற்கு நான் நேரிடையாக சென்று அந்த திருவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வந்தேன். தொடர்ச்சியாக இது 26வது மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து உடலுறுப்புகள் தானம் பெற்றிருக்கின்ற நிகழ்வு நடைபெற்று இருக்கிறது. இந்த 26 திருவுடலுக்கும் அமைச்சர் பெருமக்களும், அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட நிர்வாகத்தை சேர்ந்த உயர் அலுவலர்கள் அரசு மரியாதை தொடர்ந்து செலுத்தி வருகிறார்கள். அந்தவகையில் 55 நாட்களில் 26 பேருடைய உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டு பலருக்கு மீண்டும் மறுவாழ்வு கிடைத்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு பிறகு உடலுறுப்பு தானம் செய்ய இணையதள வழியாக முன்வந்து உள்ளவர்களின் எண்ணிக்கை 2890 பேர். இந்த திட்டம் முதல் முதலில் தொடங்கப்பட்டது 2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில். 2008 ஆம் ஆண்டிற்கு பிறகு உடலுறுப்பு தானம் செய்ய 8234 பேர் பதிவு செய்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களால் உடலுறுப்பு தானம் செய்வோருக்கு அரசு மரியாதை தரப்படும் என்கின்ற அறிவிப்பிற்கு பிறகு உடலுறுப்பு தானம் செய்ய முன் வந்தவர்கள் 2890 பேர். தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை சிறுநீரகம் 6229 பேர், கல்லீரல் - 465, இதயம் - 80, நுரையீரல் - 68, இதயம் மற்றும் நுரையீரல் - 25, கை - 26, சிறுகுடல் - 2, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் - 42, சிறுநீரகம் மற்றும் கணையம் - 41, இதயம் மற்றும் கல்லீரல் - 1, கணையம், சிறுகுடல், வயிறு - 1 ஆக மொத்தம் 7,007 பேர் உடலுறுப்பு தானத்திற்காக தமிழ்நாட்டில் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். இந்த வகையில் மூளைச்சாவு அடைந்தவர்களுடைய உடலுறுப்புகள் தானமாக பெறுவது அதிகரித்து வருகிறது. அந்தவகையில் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடலுறுப்பு தானம் பெறுவதிலும், உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்வதிலும் முதல்வர் உள்ளிட்ட மருத்துவர்கள் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். எனவே இன்றைய தனம் உடலுறுப்பு தானம் செய்த திரு.அராஜகன் கலியமூர்த்தி என்பவருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் நெஞ்சம் நிறைந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், மருத்துவத்துறை பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



திருச்சியில் தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் உட்பட பல்வேறு கட்சியினர் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் ராஜா தலைமையில் திருச்சி காந்தி மார்க்கெட் மணிகூண்டிலிருந்து துவங்கி டவுன்ஹால் வரை மறைந்த சங்கரய்யாவுக்கு மௌன அஞ்சலி செலுத்தும் வகையில் அமைதி பேரணி மேற்கொண்டனர். இப்பேரணியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மத்திய மாவட்ட கழகச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் திருச்சி கரூர் மண்டல செயலாளர் தமிழாதன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாவட்ட தலைவர் ரெக்ஸ், ம.தி.மு.க. சார்பில் கட்சியின் நிர்வாகி சேகரன் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும்

# அரசின் நடவடிக்கையில் அரசியல் செய்ய பழனிசாமி அறிக்கை!

## அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!



திருவண்ணாமலை, நவ. 19-

திருவண்ணாமலையில் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு :

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் சிப்காட் அமைக்க நிலம் எடுப்பதற்கு 3 கட்டங்களாக பணிகள் நடைபெற்றதாகவும்,

முதற்கட்டமாக 622 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதாகவும், அந்த சமயத்தில் அயல் நாட்டு தொழிற்சாலை உட்பட 13 தொழிற்சாலைகள் சிப்காட் பகுதிக்கு வந்ததாகவும், ஆரணி செய்யாறு வந்தவாசி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

**இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!**

இரண்டாவது கட்டமாக 1860 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் திராவிட மாடல் ஆட்சியில் 55 தொழிற்சாலைகள் அந்த பகுதிக்கு வர உள்ளதாகவும் கூறினார்.

மூன்றாவது கட்டமாக 1200 ஏக்கர் எடுப்பதற்காக மேல்மா, தேத்துறை, குரும்பூர், நெடுங்கல், இளநீர்குன்றம், உள்ளிட்ட 9 கிராமங்களிலும் அரசின் சார்பாக விவசாயிகள் இடம் கருத்து கேட்பு கூட்டம், விளக்க கூட்டங்கள் பலமுறை போடப்பட்டதாகவும் கூறினார்.

குறிப்பாக இந்த 9 கிராமங்களில் 1881 விவசாயிகளிடமிருந்து நிலம் எடுக்க இருந்ததாகவும் அதில் 239 விவசாயிகள் மட்டுமே ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றும் கூறினார். தொழிற்சாலைக்காக விவசாயியிடமிருந்து நிலம் எடுக்கப்பட்டால் மார்க்கெட் மதிப்பை விட இரண்டரை பங்கு மதிப்பு அதிகமாக தமிழ்நாடு அரசு வழங்குவதாகவும் கூறினார்.

விவசாயிகளுக்கு இரண்டரை மடங்கு அதிகமாக பணம் கொடுப்பது எதற்காக என்றால் விவசாயிகள் அந்த பணத்தைப் பெற்று வேறு ஒரு இடத்தில் நிலம் வாங்கி தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவே அரசு மார்க்கெட் மதிப்பை விட அதிக மதிப்பு கொடுப்பதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளை பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்றுவது தான் அரசின் நோக்கம் என்றும், அதே நேரத்தில் தொழிற்சாலைகளை உருவாக்கினால்தான் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தர முடியும் என்பதால் தான் தமிழ்நாடு முதல்வர் வெளிநாட்டு முதலீடுகளை தமிழ்நாட்டில் கொண்டுவர முயற்சித்து வருகிறார் என்றார்.

தொழிற்சாலையை வானத்திலோ, கடலிலோ கட்ட முடியாது என்றும் நிலத்தில் தான் கட்ட முடியும் என்று கூறிய அவர், நமது மாவட்டத்தில் இளைஞர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு உருவாக்கி தர வேண்டும் என்ற நமது கோரிக்கையை தான் அரசு செயல்படுத்த முன் வந்ததாகவும் கூறியவர்.

**சிலரின் தூண்டுதலினால் போராட்டம்!**

ஆனால் இந்த சிப்காட் விவகாரத்தில் ஒரு சிலரின் தூண்டுதலின் அடிப்படையில் தொடர்ச்சியாக 125 நாட்களாக போராட்டங்கள் நடைபெற்றது சுட்டிக்காட்டி அவர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து அருள் என்பவர் மக்களை தூண்டுவதற்காக தினம்தோறும் வந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியதாகவும் குற்றம் சாட்டியவர், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள எம்பி, எம்எல்ஏக்களும் விவசாயிகள்தான் நாங்கள் விவசாயிகளை காப்பாற்ற மாட்டோமா என்று கேள்வி எழுப்பிய அவர்,

விவசாய நிலம் முக்கியம் என்றும் அதை மறுக்க வில்லை அதே வேளையில் விவசாய அரிசி நிலத்தில் 5% தான் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக பாதிக்கப்படுவதாக கூறும் 9 கிராமங்களில் மட்டும் நான்காயிரம் இளைஞர்கள் சிப்காட்டில் பணிபுரிந்து வருவதாகவும் கூறினார்.

இளைஞர்களுக்கு மற்றும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடாது, அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் கிராம மக்களை சிலர் தூண்டுவதாக குற்றம் சாட்டிய அமைச்சர், சிறப்பாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசை குறை செல்வதற்காக மட்டுமே சிலரின் தூண்டுதலின் பேரில் இச்செயல் நடைபெற்றதாகவும் விவசாயிகளை வஞ்சிப்பதோ விவசாயிகளின் நிலத்தை அபகரிப்பதோ அரசின் நோக்கம் அல்ல என திட்டவட்டமாக கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் இருந்த போதிலும் 9 பேர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு இருப்பது குறித்து தான் செய்தித்தாளில் படித்து தெரிந்து கொண்டதாகவும், குறிப்பாக கடந்த இரண்டு தினங்களாக அரசு பணிக்காக வெளியூர் சென்றிருந்ததாகவும் விளக்கம் அளித்த அவர், கைது செய்யப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தார்கள் தன்னை சந்தித்து, சிலரின் தூண்டுதலின் பேரில் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குண்டர் தடுப்புச் சட்டத்தில் இருந்து தங்களது குடும்ப உறுப்பினர்களை விடுவிக்க வேண்டும் என்று மேடம் மனு அளித்துள்ளதாகவும் அதனை நேரடியாக தமிழ்நாடு முதல்வரிடம் கொடுத்து குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கி கூறி அதனை பரிசீலித்து நல்ல தீர்வை எடுக்க வேண்டும் என சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நானும் தமிழ்நாடு முதல்வரிடம் கோரிக்கை வைப்பேன் என்று உறுதியளித்தார்.

**எடப்பாடி பழனிசாமியால் முடியாததை தி.மு.க. அரசு செய்தது!**

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி செய்யாறு பகுதியில் சிப்காட் கொண்டு வருவதற்காக அரசாணை வெளியிட்டதை நினைவுபடுத்தி பேசிய அவர், அ.தி.மு.க. ஆட்சியில் செய்யாததை தி.மு.க. செய்வதற்காக முன்னெடுத்துள்ளதாகவும், தி.மு.க. ஆட்சியில் அரசாணை வெளியிட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்கலாம் என அவர்களும் நினைத்திருக்கலாம் ஆனால் அவர்களால் செய்ய முடியாததை திமுக ஆட்சிக்கு வந்த பிறகு செய்வதற்காக கையில் எடுத்ததை சுட்டிக்காட்டி அவர்,

அ.தி.மு.க. ஆட்சியில் செய்ய முடியாததை தி.மு.க. செய்ய முயற்சிக்கும் பொழுது, செய்ய முடியாத சூழலால் எடப்பாடி ஆத்திரப்படுவதாகவும், திமுக ஆட்சியை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அறிக்கையை வெளியிட்டதாகவும் கூறிய அவர், அரசியல் செய்வதற்காக எடப்பாடி அறிக்கை வெளியிட்டுள்ளார் என்றும் கூறினார்.

விவசாய சங்கத்தைச் சேர்ந்த சிலர் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக கூறியுள்ளனரே என்று செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த அவர் திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறும் பொழுது அதிமுகவிற்கு ஆதரவாக இருக்கும் விவசாயி மணிகண்டன் தான் கைதட்டி வரவேற்றார் என்றும் கூறினார்.



மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இந்த முக்கியத்துவமிக்க மாநாட்டின் முழக்கத்தை, தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் சேர்க்கின்ற விதமாக, 188 இரு சக்கர வாகனங்களைக் கொண்ட வாகனப் பேரணியை கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை எதிரே கழக இளைஞரணிச் செயலாளர், தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைத்த இரு சக்கர பேரணியை புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயத்தில் மாவட்டச் செயலாளர் – சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வரவேற்றார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, கீரை. தமிழ் ராஜா, ஞான.இளங்கோவன், பொன்.ராமலிங்கம், அ.முத்து, அ.அடைக்கலமணி, கணேசன், வி.ஆர். இளையராஜா, அ.அழகப்பன், த.மணிராஜன், ஆ.கலைச் செல்வன், கே.ஆர்.ராமசாமி, பாத்திமா பீவி, தேவி, சுப.துரைராஜா, இரா.தமிழ் ராசு, கவிக்குமார், தீன், இளையராஜா, அருண்குமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்காகொணலூர் அரசு நடுநிலைப் பள்ளியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் திடீர் ஆய்வு செய்து மாணவர்களிடத்தில் கற்றல், கற்பித்தல் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

### திருச்செந்தூர் கோவிலில் அ.தி.மு.க. ஆட்சியில்தான் கட்டணம் உயர்த்தப்பட்டது!

# கழக ஆட்சியில் சிறப்பு தரிசனக் கட்டணம் உயர்த்தப்படவில்லை!

### கந்தக்கோட்டத்தில் நடைபெற்ற கந்த சஷ்டி கவச பாராயணத்தில் பங்கேற்ற அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, நவ. 19-

சென்னை, பூங்கா நகர், கந்தகோட்டம் முத்துக்குமார சுவாமி (கந்தசாமி) திருக்கோயிலில் கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (17.11.2023) தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம், அரசு இசைக் கல்லூரி மற்றும் இராஜா அண்ணாமலை மன்றம் தமிழ் இசை கல்லூரியைச் சேர்ந்த 108 மாணவ மாணவியர் பங்கேற்கும் கந்த சஷ்டி பாராயணம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கந்தகோட்டம் முத்துக்குமார சுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டி விழா கடந்த 13 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. நாளைய தினம் சூரசம்ஹாரமும், நாளைய மறுதினம் திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளது. கடந்தாண்டு இந்து சமய அறநிலைத்துறை சார்பில் வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் இசை கல்லூரியை சேர்ந்த 108 மாணவ மாணவியர் பங்கேற்று கந்த சஷ்டி கவச பாடலை பாடினார்கள். இன்றைய தினம் கந்தகோட்டத்தில் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு இசை கல்லூரி மற்றும் இராஜா அண்ணாமலை மன்றம் தமிழ் இசை கல்லூரியை சேர்ந்த மாணவச் செல்வங்கள் கந்தசஷ்டி பாடலை பக்தர்கள் மனம் குளிர பாடினார்கள். இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்த டாக்டர் சாய் சரஸ்வதி, டாக்டர் ஹரிஷ் நாராயண், டாக்டர் பத்மினி, டாக்டர் மீனாட்சி ஜெயக்குமார், எம்.எம்.சேஷாத்திரி ஆகியோருக்கு துறையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து முருகன் திருக்கோயில்களிலும் கந்த சஷ்டி விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்கள் மன மகிழ்ச்சி அடைகின்ற அளவிற்கு அனைத்து அடிப்படை தேவைகளையும் நிறைவேற்றி தந்துள்ளோம். குறிப்பாக முருகனின் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் கடலோரத்தில் நாளைய தினம் சூரசம்ஹாரம் நிகழ்ச்சியும், அதை தொடர்ந்து திருக்கல்யாணம் நடைபெற இருக்கின்றது. இத்திருக்கோயிலில் கந்த சஷ்டி விழா தொடங்கியது முதல் இதுவரை பல லட்சம் பக்தர்கள் இறை தரிசனம் செய்திருக்கிறார்கள். சூரசம்ஹாரம் நிகழ்ச்சியில் சுமார் 20 லட்சம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இறையன்பர்கள் விரதம் மேற்கொள்வதற்காக 26 இடங்களில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்குகின்ற வகையில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தோடு, நாள் முழுவதும் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. அதிக எண்ணிக்கையிலான காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

திருச்செந்தூர் திருக்கோயிலில் பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் இந்த அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் செய்து கொடுத்துள்ளது. இந்த மகிழ்ச்சியான நிகழ்வை பொறுக்க முடியாத சிலர் திட்டமிட்டு தரிசன கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக தவறான செய்தியினை பரப்பும் சதிவேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அதுகுறித்த வீடியோவிற்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அந்த தவறான வீடியோவிற்கு காரணமானவர்கள் மீது திருச்செந்தூர் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருக்கின்றது. 2018 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் பாஜகவும் கூட்டணியில் இருந்தபோது தான் ரூ.500 என்று இருந்த விஸ்வரூப தரிசன கட்டணத்தை ரூ.2,000 மாகவும், அபிஷேக கட்டணத்தை ரூ.500 லிருந்து ரூ.3,000 மாகவும் உயர்த்தினார்கள். கடந்த ஆண்டு வரை ரூ.800 ஆக இருந்த சிறப்பு தரிசன கட்டணம் இந்தாண்டு அறங்காவலர் குழு முடிவின்படியும், அறிவிப்பு செய்யப்பட்டு பொதுமக்களின் கருத்து பெறப்பட்டும் சட்ட திட்டத்திற்குட்பட்டு சிறப்பு தரிசன கட்டணம் ரூ.1,000 மாக உயர்த்தப்பட்டது. எப்போதும் போல் ரூ.100 சிறப்பு தரிசனமும், பொது தரிசனமும் தொடர்ந்து சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே திருச்செந்தூர் திருக்கோயிலில் எந்த ஒரு மாற்றமும் செய்யப்படவில்லை. ஒரு சிலர் திட்டமிட்டு இதுபோன்ற வதந்திகளை பரப்பி பக்தர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நேற்றைய தினம் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் திருச்செந்தூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பணிகளை பார்வையிட்டபோது அங்கிருந்த அனைவரும் சிறப்பான ஏற்பாடுகளை செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறைக்கும் மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்ததாக கூறினார்கள். விஷமத்தனமான பிரச்சாரங்களை செய்து ஆன்மீகத்திற்கு எதிராக இருக்கும் ஆட்சி என்று பறைசாற்றுவதற்காக தொடர்ந்து கோயபல்ஸ் பிரச்சாரத்தை செய்கிறார்கள். ஆனால் இதை பக்தர்கள் நம்பி ஏமாறாக தயாராக இல்லை. இந்த விஷம பிரச்சாரத்தின் பின்னணியில் இருப்பவர்கள் ஆட்சிக்கு வந்தால் இந்து சமய அறநிலைத்துறை இருக்காது என்றும், முதல் கையெழுத்து அதற்குதான் என்றும் மனப்பால் குடித்துக்கொண்டு பகல் கனவை கண்டு கொண்டிருப்பவர்கள் தான்.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து தொல்லியல்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களை கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி ஆய்வு செய்து அறிக்கை அளிக்க இரண்டு நீதிபதிகளை கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது. அதன்படி குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு வெகு விரைவில் சிதம்பரம் கோயிலில் கட்டுமான பணிகள் ஏதும் நடைபெற்றுள்ளதா, ஏதாவது மரங்கள் வெட்டப்பட்டு இருந்தால் அது குறித்தும் கட்டமைப்புகளை மாற்றி அமைத்திருந்தால் அது குறித்தும் ஆராய்ந்து நீதிமன்றத்திற்கு அறிக்கையாக தாக்கல் செய்வார்கள்.

பரம்பரை அறங்காவலர்கள் நிர்வகிகின்ற எந்த திருக்கோயில்களிலும் இந்து சமய அறநிலையத்துறை தலையிடுவதில்லை. சட்டத்திற்கு உட்படாமல், அதிகமான புகார்கள் பெறப்படுகின்ற இடங்களில் இந்து சமய அறநிலையத் துறை தலையிடலாம் என்பது சட்டம். சிதம்பரத்தில் கனக சபை மீதேறி இறை தரிசனம் செய்வது காலகாலமாக இருந்து வருகின்றது. 2018க்கு பிறகு கொரோனா காலகட்டங்களில் அது தடை செய்யப்பட்டிருந்தது. அதையே வழக்கமாகக் கொண்டு கனகசபை மீதேறி இறை தரிசனம் செய்வதை தடுத்தார்கள். நீதிமன்றத்தின் மூலம் இந்து சமய அறநிலையத்துறை எடுத்த நடவடிக்கைகளால் கனக சபையின் மீதேறி இறை தரிசனம் செய்வது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. அதை தடுக்கின்ற போது தான் இந்து சமய அறநிலையத்துறை தலையிடுகின்றது. அதோடு மட்டுமல்லாமல் நகைகள் சரி பார்ப்பு பணி, திருக்கோயில் வருமானங்களின் பயன்பாடு குறித்த புகார்கள் அடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறை கணக்கு கேட்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கின்றது. அதை தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட முறையில் தீட்சிதர்களும் எங்களுக்கு தேவையானவர்கள் தான். இந்த ஆட்சியானது சட்டத்தின்படி நடக்கும் ஆட்சியாகும். இன்னார் இனியவர் என்ற பாகுபாடே இல்லை. ஆகவே சட்டத்திற்கு உட்பட்டு திருக்கோயில் நிர்வாகம் நடைபெறும் என்றால் நிச்சயமாக அதில் இந்து சமய அறநிலையத்துறை தலையிடாது. நாங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் வலுவாகவும், அதே நேரத்தில் ஜாக்கிரதையாகவும் எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் இருப்பதால் இது குறித்து விவரமாக உள்ளே செல்ல முடியவில்லை. இறுதியில் தமிழ்நாடு அரசு இந்த சட்ட போராட்டத்தில் நிச்சயம் வென்று காட்டும். இது தனிப்பட்ட முறையில் தீட்சிதர்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இறையன்பர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தந்து சட்டப்படி அந்த கோவில் நிர்வாகம் நடைபெறுவதற்காக எடுக்கப்படுகின்ற சட்ட போராட்டமாகும் என்று தெரிவித்தார்.

### கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி நடத்தும்

# மாநில அளவிலான பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு - கட்டுரைப் போட்டிகள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

கடலூர், நவ. 19-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் நடை பெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ - மாணவிகளுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் 25.11.2023 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அதுசமயம் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவச் செல்வங்களை கலந்துகொள்ள செய்து விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.




தர்மபுரி கிழக்கு மாவட்டம், தர்மபுரி சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் பி.ரகு ஏற்பாட்டில் "நீட் விலக்கு நமது இலக்கு" கையெழுத்து இயக்கத்தை தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி துவக்கி வைத்தார்.மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம், துணை ஒருங்கிணைப்பாளர்கள் சே.உதயசூரியன், ஈஸ்வர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உடன் தர்மபுரி நகர மன்ற தலைவர் திருமதி.லட்சுமி மாது,மாநில கைம்பெண் நல வாரிய உறுப்பினர் ரேணுகாதேவி,மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, நகர துணை செயலாளர் முல்லைவேந்தன்,ஐ.டி.விங் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் காயத்ரி பிரபாகரன், கண்ணதாசன், பிரபு, நரேஷ்குமார்,தேன்மொழி மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள்,நகர நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், நகர ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### சென்னை பெருநகர வளர்ச்சி குழும

# மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.19-

சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சென்னை பெருநகர வளர்ச்சி குழும மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை, இணையவழி திட்ட அனுமதி பயிற்சி காணொலி (PreDCR Tutorial Videos), 12 துறைகளின் ஒருங்கிணைந்த தடையில்லா சான்றிதழ் மற்றும் வீடு/மனை வாங்குவோருக்கான விழிப்புணர்வு சித்திர கதைகள் குறித்த கையேடுகள் ஆகியவற்றை வெளியிட்டு தொடங்கி வைத்தார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது: -

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழும மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை, இணைய வழி திட்ட அனுமதி பயிற்சி காணொலி, 12 துறைகளின் ஒருங்கிணைந்த தடையில்லா சான்றிதழ் வழங்கும் சேவைகள் நேற்று முன்தினம் (17.11.2023) தொடங்கி வைக்கப்பட்டு, வீடு மற்றும் மனை வாங்குவோருக்கான விழிப்புணர்வு சித்திர கதைகள் குறித்த கையேடுகள் வெளியிடப்பட்டது. மேலும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் (Layout Approval Application) இன்று முதல் முழுமையாக இணையவழி (Online) மூலம் பெறப்பெற்று, பரிசீலிக்கப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படும்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒற்றை சாளர முறை அடிப்படையில் இணைய வழி (Single Window Clearance system) திட்ட அனுமதி மென்பொருளை உருவாக்கி, மே மாதம் 2022ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும ஆன்லைன் போர்ட்டல் மூலம் பெறப்பட்ட 1,179 விண்ணப்பங்களில், 820 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது முதல், திட்ட அனுமதி வழங்கும் வரை, முற்றிலுமாக இணைய வழியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பதிவு செய்யப்பட்ட கட்டிட வல்லுநர்கள், கட்டிடப் பொறியாளர்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள் ஆகியோர்களுக்கு இணையதள திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிப்பது, கையாளுவது சம்பந்தமாக மேம்படுத்தப்பட்ட மென்பொருள் மூலம் பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டு, இத்திட்டம் குறித்த விழிப்பு ணர்வை ஏற்படுத்திட பல்வேறு நேர்முக பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

PreDCR கூர்ந்தாய்வு மென்பொருள் மூலம் திட்ட அனுமதி வரைபடம் உருவாக்குவதற்கான படிப்படியான செயல்முறைகளை பயிற்சி காணொளி (Tutorial Videos) மூலம் விரிவாக விளக்கப்படு கிறது. இது தொடர்பாக, 10 பயிற்சி காணொளிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "சித்திர கதை" (Comic Strip) துவக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இரண்டு கருப்பொருள்களுக்காக "சித்திர கதை" (Comic Strip)' உருவாக்கப்பட்டுள்ளது.

திட்ட அனுமதி எதற்காக நமக்கு தேவைப்படுகிறது?

பிளாட் (Flat) அல்லது ப்ளாட் (Plot) வாங்கும் முன் என்னென்ன அம்சங்களைச் சரிபார்க்க வேண்டும்?

மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் (Layout Approval Application) (17.11.2023) முதல் முழுமையாக இணையவழி (Online) மூலம் பெறப்பெற்று, பரிசீலிக்கப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படும். இணைய வழி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது முதல் ஒப்புதல் வழங்குதல் வரை முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இணைய வழி மூலம் கட்டிட அனுமதி வழங்குவதையும் செயல்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஆன்லைன் போர்ட்டலை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (RDPR) மற்றும் பேரூராட்சிகள் இயக்ககம் (DTP) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு தடையில்லா சான்றிதழ் வழங்கும் துறைகளான viz., CMRL, PWD, WRD, TNHB, ELCOT, Forest, Geology & Mines, SIDCO, State Highways, Southern Railway, Collectorates and DFRS ஆகியவை ஆன்லைன் போர்ட்டலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும ஆன்லைன் போர்ட்டல் விண்ணப்ப தாரர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இனி வரும் காலங்களில் அனைத்தும் இணையவழி மூலம் செயல்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) பெரும் வளர்ச்சியை கண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் என சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச் சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், முதுநிலை திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன்னாப்பூர் கீழ்பாதி பொ.செகதீசன்

### நவம்பர் 19 (1980)



**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தீவிரமாக கழகப் பணியாற்றியவர்.**

**திராவிடநாடு, முரசொலி, நம்நாடு, மாலைமணி ஆகிய கழக இதழ்களை வாங்கி, அதனை பொதுமக்களுக்கும், தோழர்களுக்கு வழங்கி கழக கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.**

**ஓரத்தநாடு, பொன்னாப்பூர் கீழ்பாதி கிளைக் கழகச் செயலாளராகவும், அவைத் தலைவராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1952 முதல் 1978 வரை தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவர் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.11.2023) பிலிப்பைன்ஸ் நாட்டில் 08.11.2023 முதல் 12.11.2023 வரை நடைபெற்ற முதியோருக்கான 22வது ஆசிய மாஸ்டர் தடகளப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்ற சென்னை மாவட்டத்தைச் சார்ந்த வீரர், வீராங்கனைகள் முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 42வது இந்தியப் பண்பாட்டு வர்த்தகப் பொருட்காட்சி –

# தமிழ்நாடு நாள் விழா! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

## புதுடெல்லியில் 14 நாட்கள் நடைபெறுகின்றது!

புதுடெல்லி, நவ.19-

புதுடெல்லியில் நடைபெறும் 42-வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி -2023-ஐ முன்னிட்டு பிரகதி மைதானத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கில் நேற்று முன்தினம் (17.11.2023) "தமிழ்நாடு நாள் விழா"வை தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஆசிஷ் சாட்டர்ஜி மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர்/இணைச் செயலாளர் த. மோகன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியானது நவம்பர் 14-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரை 14 நாட்கள் நடத்தப்பட்டு வருகிறது. இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்று தங்களது அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றை காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களைச் சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் -"உலகம் ஒரே குடும்பம் - வர்த்தகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது" (Vasudhaiva Kudumpakam-United by Trade) ஆகும். அதாவது உலகமே ஒரு குடும்பம் அது வர்த்தகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாகும்.

**12 துறைகள் சார்பில் அரங்குகள்!**

இக்கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (SIDCO), வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகத்துறை, சுற்றுலாத்துறை, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் கழகம் (POOMPUHAR), தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (Co-optex) ஆகிய 12 துறைகள் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னோடித் திட்டங்களான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துபாய், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் போன்ற வெளிநாட்டு பயணங்கள் மேற்கொண்டு தமிழ்நாட்டில் தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டது குறித்தும், அரசின் சாதனைகள் குறித்தும் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவன (SIPCOT)த்தின் ஸ்ரீபெரும்புதூர் வல்லம் வடகாலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழிற்சாலையில் பணிபுரியும் 18000 ஆண் தொழிலாளர்களுக்கான தங்கும் வசதி கொண்ட விடுதி கட்டடங்கள், சிப்காட் தொழில் புத்தாக்க மையத்தின் மாதிரி வடிவமைப்புகள், சிப்காட் தொழில் பூங்காக்களின் விவரங்கள் கொண்ட மின்னணுத் திரை பலகைகள், சிப்காட் உள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் வாகனங்கள், உதிரிபாகங்களின் மாதிரி வடிவமைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், டிட்கோ நிறுவனத்தின் நியோ டைட்டல் மாதிரி வடிவமைப்பும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சிப்காட், டிட்கோ ஆகிய நிறுவனங்கள் தொழில்துறையில் வகிக்கும் முக்கிய பங்கு ஆகியவை தொடர்பான குறும்படங்கள் எல்.இ.டி. தொலைக்காட்சிகளில் திரையிடப்படு கின்றன. இவ்வரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதில் முக்கிய அம்சம் சென்னையில் வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு (Global Investors Meet) தொடர்பான விவரங்களை பார்வையாளர்கள் அறிந்து பயன்பெறும் வகையில் QR Code முறை பொருத்தப்பட்டு வசதி செய்யப்பட்டுள்ளது.

**42 வகையான பாரம்பரிய நெல் வகைகள்!**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத்திலிருந்து பிரதான உற்பத்தி செய்யும் பொருட்களில் சில பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதன. அவை மதுரையின் பிரசித்திப்பெற்ற சுங்கடிப் புடவை, சிவகங்கை கண்டாங்கி புடவை, ஈரோடு ஜமக்காளம், திருப்பூர் பனியன், கடலூர் செராமிக் பொம்மைகள், காஞ்சிபுரம் களிமண்ணால் செய்த பொம்மைகள், இராமநாதபுரம் பனை ஓலைகளால் செய்த கைவினைப் பொருட்கள், கன்னியாகுமரி நாரினால் செய்யப்பட்ட மிதியடிகள், மரவள்ளிக்கிழங்கினால் உற்பத்தி செய்யப்படும் மாவு மற்றும் ஜவ்வரிசி வகைகள், ஊட்டி இண்டுகோசர்வ் நிறுவனத்தின் 16 தொழிற்சாலைகள் மூலமாக பெறப்பெற்ற தேயிலை தூள்களை தரம் பிரித்து மதிப்புக்கூட்டப்பட்ட சுவையான பலவகை தரமான தேயிலை தூள்களை கவர்ச்சியான சிறிய பையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள அரங்கில், சிறுதானிய ஆண்டை முன்னிட்டு சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் உலக கோப்பை மாதிரி மற்றும் நெல்லுக்கு மாற்றாக சிறுதானியங்களின் பயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மாதிரி அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பாரம்பரிய நெல் வகைகளின் மேன்மையை உணர்த்தும் விதமாக 42 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டும், அதன் மருத்துவ குணங்கள் அடங்கிய பதாகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அரங்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரிசு நிலங்களையும் பரிசு நிலங்களாக மாற்றும் தமிழ்நாடு அரசின் மிக முக்கிய திட்டமான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் அரசின் 16 துறைகள் ஒருங்கிணைந்து கிராமத்தின் தன்னிறைவு பூர்த்தி செய்யும் வகைளில் ஏரிகள் மற்றும் கால்வாய்கள் தூர்வாருதல், கிணறுகள் தோண்டுதல், ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், கிராமப்புற சாலைகள் அமைத்தல், கிராமத்தில் தரிசு நிலப் பகுதிகளில் பழமரச் செடிகள் நடவு செய்தல், சொட்டு நீர்பாசனம் அமைத்தல், காளான் வளர்ப்பு, பசுமைக் குடில் அமைப்பு, தானிய சேமிப்பு கிடங்கு அமைத்தல் மற்றும் வேளாண் இயந்திரங்கள் வழங்குதல் போன்றவைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய மூங்கில் இயக்கம், பனை மேம்பாட்டுத் திட்டம், மானாவரி பகுதி மேம்பாட்டுத் திட்டம், தென்னை வளர்ச்சித் திட்டம், தேசிய தேனீக்கள் வளர்ப்பு மற்றும் தேனீ இயக்கம், தொகுப்பு வளர்ச்சி திட்டம் போன்ற திட்டத்தின் செயல்பாடுகளும், தமிழகத்தில் தோட்டக்கலை பொருட்களுக்கு வழங்கிய புவியியல் குறியீட்டினையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் துறை அரங்கில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் விளைப்பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், தமிழகத்தின் பாரம்பரிய நெல் வகைகள், தமிழ்நாட்டின் புவியியல் குறியீடு (GI Tags) பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தங்களது தயாரிப்புகளையும், பூம்புகார் நிறுவனம் தங்களது தயாரிப்புகளையும் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவையும் தங்களது அரங்கில் விற்பனைக்கு வைத்துள்ளன.

சுற்றுலாத் துறையில் சுற்றுலா தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள முக்கியமான சுற்றுலாத் தளங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வரங்கிற்கு வரும் பார்வையாளர்களுக்கு தகவல் மற்றும் சுற்றுலா சம்பந்தமான கையேடுகள் வழங்கப்படுகிறது. அதே சமயம் சுற்றுலா மற்றும் தங்கும் விடுதிக்கான முன்பதிவும் செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு அரங்கினை" தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர்/இணைச் செயலாளர் ஆகியோர் நேற்று (17.11.2023) பார்வையிட்டார்கள். அதன் பிறகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

**உதிரிபாகங்கள் தயாரிப்பதில் தமிழ்நாடு முதலிடம்!**

"இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் தொழில் வளமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இப்பொருட்காட்சியை முன்னிட்டு நேற்று (17.11.2023) தமிழ்நாடு நாள் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த இரண்டரை ஆண்டு காலமாக டு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்தியாவிலேயே 13-வது இடத்தில் இருந்து தமிழ்நாட்டின் தொழில் துறை இன்று 3-வது இடத்திற்கு முன்னேறியிருக்கின்ற வகையில் பல்வேறு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கின்றன.

மென்பொருளிலே தேசிய அளவில் முதலிடத்தை பிடிக்கக் கூடிய வகையில் மென்பொருள், உதிரிபாகங்கள் தயாரிப்பதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. ஏற்றுமதியில் அதிக அந்நியசெலாவணி ஈட்டி இருக்கின்ற வகையில் தமிழ்நாடு முன்னேறி இருக்கின்றது. இப்படி பல்வேறு வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கும் இந்த சூழ்நிலையில் புதுடெல்லியில் வர்த்தகத்தால் ஒன்றிணைவோம் என்ற வகையில் தமிழ்நாடு சார்பில் அரங்கம் அமைத்து தமிழ்நாடு நாள் விழா கொண்டாடுவதில் பெருமைகொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் உலகளவில் இருக்கக்கூடிய தொழிலதிபர்களை யெல்லாம் அழைத்து தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்குவது தொடர்பாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை வரும் ஜனவரி மாதம் நடத்த திட்டமிட்டு, அதற்கான முன்னெடுப்புகள் நடந்துக்கொண்டிருக்கின்றன. எனவே, அது சிறப்பாக அமைந்து மேலும் பல்வேறு தொழில்கள் உருவாகி தமிழ்நாட்டில் உள்ள படித்த இளைஞர்களுக்கும், மக்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாகி அவர்கள் பொருளாதாரத்திலும், தமிழ்நாடு அரசின் பொருளாதாரத்திலும் நிச்சயமாக முன்னேற்றம் ஏற்படுகின்ற வகையில் அந்த பணிகள் அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அந்த வகையில் இந்த கண்காட்சி அதற்குச் சாட்சியாக விளங்கும்".

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினை சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில், தமிழ்நாடு நாள் விழா நேற்று (17.11.2023) பிரகதி மைதானத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு கலைப் பண்பாட்டுத் துறையின் சார்பில், தமிழ்நாட்டில் புகழ்பெற்ற பரதநாட்டியம் மற்றும் கைச்சிலம்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம் மற்றும் கோலாட்டம் ஆகிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இக்கலைநிகழ்ச்சிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்/இணைச் செயலாளர் ஆகியோர் கண்டுகளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார். டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட, பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் கூடுதல் உள்ளுறை ஆணையர் (பொ.) மற்றும் தலைமை கணக்கு அலுவலர் என். சீனிவாசன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) க. இளந்திரையன் மற்றும் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் பொது மேலாளர் வி.பி. தெய்வசிகாமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2023–24 ஆம் ஆண்டு கரும்பு அரவைப் பருவம் நேற்று (18.11.2023) நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கொங்குநாடு சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் கே.பி.எஸ்.சுரேஷ்குமார், மேலாண்மை இயக்குநர் கா.ராமல்லிகா, ஒன்றிய கழகச் செயலாளர் பெ.நவலடி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அங்கத்தினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இதுவரை ரூ.5 கோடியே 87 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!**

**2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்**

**2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!**

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் - உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டுவருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகைவழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 87 லட்சத்து 90 ஆயிரம்.** இந்தமாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/ –** (இரண்டு லட்சம்) 17.11.2023 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து போகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப் படுகிறது..

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.வேதரெத்தினம்,<br>மடப்புரம், தீவாம்பாள்புரம் அஞ்சல், திருவாரூர் | - 25,000/- |
| 2. | கே.அருள்மணி,<br>12வது வார்டு, உப்பிலியல் தெரு, பரமத்தி வேலூர், நாமக்கல் | - 25,000/- |
| 3. | கே.ஆறுமுகம்,<br>நரியாப்பட்டு கிராமம் அஞ்சல், திருவண்ணாமலை | - 25,000/- |
| 4. | ஆர். நாராயணன்,<br>அங்காளயம்மன் கோவில் தெரு, எடப்பாடி, சேலம் | - 25,000/- |
| 5. | எம். பாப்பம்மாள்,<br>சஞ்சய்காந்தி காலனி, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை–78 | - 25,000/- |
| 6. | ஏ.கணேசன்,<br>சேவூர் ஒன்றியம், ஆலத்தூர் வடக்கு, திருப்பூர் மாவட்டம் | - 25,000/- |
| 7. | 7.டி.ரங்கசாமி,<br>பாரதி நகர், கட்டபெட்டு, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். | - 25,000/- |
| 8. | எஸ்.அழகர்,<br>13வது வார்டு, பி.மீனாட்சிபுரம், போடி, தேனி மாவட்டம். | - 25,000/- |
| | மொத்தம் | ரூ. 2,00,000/- |

### கடலூர் மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சிறப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ. 19-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி அன்று 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்கவும் நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் 25.11.2023 - 26.11.2023 தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாவட்ட, ஒன்றிய, நகர பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள், மற்றும் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் BLA 2 ஆகியோர் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாகை சந்திரசேகர் - விஜயா தாயன்பன் பங்கேற்பு! தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - நாடக விழா!

## அமைச்சர்கள் மற்றும் பீட்டர் அல்போன்ஸ் - பூச்சி முருகன் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, நவ.19-

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் உலக நாடகத் தினத்தை முன்னிட்டுநாடக விழா 20, 21, 22.11.2023 (திங்கள், செவ்வாய், புதன்) ஆகிய மூன்று தினங்களில் மாலை 6 மணிக்கு, மயிலாப்பூர் பாரதிய வித்யா பவன் அரங்கில் நடைபெறுகின்றது.

மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவிற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்க, உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் வரவேற்றுப் பேசுகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கீதா ஜீவன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் விழாப் பேருரையாற்றுகின்றனர். மாநில சிறுபான்மையினர் ஆணையர் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு விட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.மூன்று நாட்களும் நாடகங்கள் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (17.11.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மருத்துவ மாநாடு கையேட்டினை வெளியிட்டு, வலைதளத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மரு.நாராயணசாமி, தமிழ்நாடு சுகாதார அமைப்பின் திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அரவிந்த், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவத்துறை பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மருத்துவத்தின் எதிர்காலம் குறித்த

# கலைஞர் நூற்றாண்டு சர்வதேச மருத்துவ மாநாடு!

## சென்னையில் ஜன. 19 முதல் 21 வரை நடைபெறுகிறது! அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு



சென்னை, நவ. 19 -

'மருத்துவத்தின் எதிர்காலம்' குறித்த கலைஞர் நூற்றாண்டு சர்வதேச மருத்துவ மாநாடு சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் வரும் 2024 ஜனவரி 19 முதல் 21 வரை நடைபெறுகிறது.

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,

• தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் இணைந்து 2024 ஜனவரி 19 முதல் 21 வரை "மருத்துவத்தின் எதிர்காலம்" என்கிற தலைப்பில், கலைஞர் நூற்றாண்டு சர்வதேச மருத்துவ மாநாடு, சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

• சுகாதாரம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டமன்றத்தில் (2023-2024) துறைக்கான மானியக் கோரிக்கையில் வெளியிட்ட அறிவிப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

• மருத்துவத்தின் எதிர்கால மாநாடு, மருத்துவத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கக் கூடிய அண்மையிலான முன்னேற்றங்கள் பற்றிய யோசனைகள், அறிவு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு தளமாக செயல்படும்.

இதுகுறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்துள்ள பேட்டி வருமாறு:-

• இந்த மாநாட்டில் மருத்துவ கண்டுபிடிப்புகளில் அதிநவீன கவனம் செலுத்தும் அமர்வுகள் இருக்கும். தேசிய அளவில் மற்றும் சர்வதேச வல்லுநர்கள் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் மிகவும் பொருத்தமானவற்றை தங்களில் கருத்துரைகளில் தெரிவிப்பார்கள். பல்வேறு மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் இளங்கலை, முதுகலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்களும் மாநாட்டில் விரிவுரைகள் மற்றும் குழு விவாதங்களில் கலந்து கொண்டு பயனடையலாம்.

**சிறப்புகள்**

மாநாட்டில் பின்வரும் சிறப்புகள் பற்றிய அமர்வு இருக்கும்.

1. கண், காது, மூக்கு தொண்டை 2. இதய அறிவியல் 3. நீரிழிவு நோய் 4. கண் மருத்துவம் 5. ரோபோடிக் அறுவை சிகிச்சை 6. மருத்துவக் கல்வி 7. சிறு நீரகவியல் 8. தடுப்பூசி மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் 9. ஹெபடாலஜி மற்றும் காஸ்ட்ரோ என்டராலஜி 10. நரம்பியல் 11. புற்றுநோயியல் 12. செயற்கை நுண்ணறிவு 13. மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம் 14. குழந்தை மருத்துவம் 15. எலும்பியல் 16. மனநல மருத்துவம் 17. அவசர மருத்துவம் 18. ஆய்வக மருத்துவம் மற்றும் ஜீனோமிக்ஸ் 19. ஆராய்ச்சி மற்றும் தொற்றுநோயியல் 20. பல் மருத்துவம் 21. ஆயுஷ் 22. நர்சிங் 23. மருந்தகம் 24. புனர்வாழ்வு 25. மருத்துவம் சார்ந்த படிப்புகள்.

ஒவ்வொரு சிறப்புக்கும் 6 விரிவுரைகள் இருக்கும். மாநில அளவிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் இருந்து விரிவுரையாளர்கள் அழைக்கப்பட உள்ளார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தோஹா ஆகிய நாடுகளில் இருந்து 23 சர்வதேச அளவில் வல்லுனர்களும். தேசிய அளவில் அனைத்து மாநிலங்களைச் சார்ந்த மருத்துவ மற்றும் தமிழ்நாட்டின் அரசுத் துறையைச் சேர்ந்தவர்களும் கருத்துரை வழங்க உள்ளார்கள்.

பல்வேறு சிறப்புகளில் மருத்துவத்தின் எதிர்காலம் குறித்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களிடையே அறிவியல் தொழில்நுட்ப மின்னணு முறையில் மற்றும் மின் சுவரொட்டி வாயிலாக விழிப்புணர்வினை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மாநாட்டில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு அறுவை சிகிச்சை பயிற்சி நிலையங்கள் இருக்கும்.

இதனை முன்னிட்டு சென்னையில் வர்த்தக மையம் நடைபெறும் கண்காட்சியில் 100 ஸ்டால்களுக்கான அறிவியல் அமர்வுடன் வழங்கப்படும்.

மாநாட்டில் மூன்று நாட்களும் பொது மக்களுக்கான விழிப்புணர்வு அமர்வு நடைபெறும். தமிழ்நாடு அரசின் சுகாதாரம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறையின் பல்வேறு நோய்கள் மற்றும் அதன் தடுப்பு மற்றும் துவக்க நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை இது ஏற்படுத்துகிறது. பொதுமக்களுக்கு மார்பகப் புற்றுநோ ய்க்கான பரிசோதனைக்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாணவர் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக சர்வதேச அளவிலான பல்வேறு மருத்துவப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் 100 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டிற்கு விருந்தினராக மற்ற நாடுகளில் உள்ள சுகாதார அமைச்சர்களை அழைக்கத் திட்டமிடப்பட்டு ள்ளது.

எமினென்ட். எமர்ஜென்சி மெடிசின் ஸ்பெஷலிஸ்ட் மூலம் அடிப்படை உயிர் பாதுகாப்பு குறித்து மாணவர்களுக்கு பிரத்யேகப் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் (அலுமினி) மூலம் வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கான அமர்வுகளும் நடத்தப்படவுள்ளது.

இம்மாநாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக இணையதளம் மூலம் பதிவுகள் செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி யளித்தார்.



புதுடெல்லி பிரகதி மைதானத்தில், 42வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் உள்ள திறந்தவெளி கலையரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (17.11.2023) தொடங்கி வைத்து, தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறை கலைஞர்களால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். உடன் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஆசிஷ் சாட்டர்ஜி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# உத்திரமேரூரில் இளைஞர் எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

காஞ்சிபுரம், நவ.19-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநினத்தை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (20.11.2023 - திங்கள்கிழமை) மாலை 5 மணிக்கு, கே.எம்.ஆர். பேருந்து நிலையம் அருகில் உத்திரமேரூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் க.செல்வம் எம்.பி., இரா.நாகன், டி.குமார், பொ.சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்திகுமார், மா.ஏழுமலை, பெ.மணி, இளமதி கோவிந்தராஜ், பத்மா பாபு, டாக்டர் வி.திவாகர், கோ.காளிதாஸ், ஏ.கே. ரமேஷ்பாபு, டி.கே. கோபாலகிருஷ்ணன், கே.தயாளன், தே.வீராசாமி, எம்.ஆர். தாமஸ், ஏ.மூர்த்தி, ஆர். மணி, இ.கண்ணாயிரம், லோ.பவ்யா, து.சுந்தர், மு.தாமோதரன், தா.சுப்பராயன், எஸ். ருத்தரகோட்டி, சு.சுகுணா, சுந்தர்ராஜன், ஏ.எம்.கெங்கன், தே.பாபு, டி.எஸ்.குமாரதேவ், இரா. கார்த்திகேயன், க.மாயகிருஷ்ணன், து.ரமேஷ், ஏ.வீரமணி, ஆ.ஜெயகாந்தா, ப.மகேந்திரன், க.அப்துல் அக்கீம், வெ.கோவிந்தராஜ், வெ.குணசேகரன், மா.கருணாநிதி, ஏ.செல்லமுத்து, வி.ராஜபாண்டி, ஆ.நீலகண்டன், இ.மனோகரன், ம.சத்தியா மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

வெ.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆரணி ஏ.செல்வரசு**

**நவம்பர் 19 (2015)**



**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மிதிவண்டியில் கிராமந்தோறும் சென்று, கொள்கைகளை பரப்பி கழகத்தை வளர்த்தவர்.**

**ஆரணி நகரச் செயலாளராக தொடங்கி, ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராக 1986 முதல் 1996 வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் முதன்மைத் தொண்டராக திகழ்ந்தவர்**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து சென்று நடத்தியதோடு, தாமும் அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தி.மு.க. சட்டத்திட்டத் திருத்தக்குழு

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. - நிர்வாகிகள் பங்கேற்றனர்!

சென்னை, நவ.19-

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் 17.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி. தலைமையில், சட்டதிட்டத் திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் உறுப்பினர்கள் தென்றல் செல்வராஜ், மேலூர் கரு.தியாகராஜன், தஞ்சை சி.இறைவன், சுப.த.சம்பத் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை மாதக்கணக்கில் கிடப்பில் போட்டு, அவற்றை திருப்பி அனுப்பியுள்ள தமிழ்நாடு ஆளுநருக்கு கண்டனம்.

"அரசியல் மாண்புகளையோ மாநில உரிமைகளையோ மதிக்காத ஒன்றிய ஆட்சியாளர்களால் இந்திய அரசியலமைப்புச் சட்டமே ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும்கூட மதிக்காத நியமனப் பதவிக்காரர்களின் அடாவடிகள், கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைக்கின்றன. மதவாத - மொழி ஆதிக்க மானுட விரோத அரசியல் ஒவ்வொரு மாநில மக்களையும் நடுங்கச் செய்கிறது." என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'நெருப்பின் பொறிகளே.. நீங்கள்தான் தேவை!' எனும் தலைப்பில் 'உங்களின் ஒருவன் மடலில்' குறிப்பிட்டதைப் போல,

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு, தன் மாநில நலனுக்காகவும் - மக்களின் நலனுக்காகவும் கொண்டு வரப்பட்ட மசோதாக்களை முறைப்படி, சட்டமன்றத்தில் வைத்து, விவாதம் நடத்தி, ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு அரசின் மசோதாக்களை, நியமனம் செய்யப்பட்ட ஒரு ஆளுநர் ஒப்புதல் அளித்திடாமல், வேண்டுமென்றே, பல மாதங்களாக கிடப்பில் போட்டு, மாநில அரசு உச்ச நீதிமன்றத்திற்கு சென்று முறையீடு செய்த பின்னர், அம்மசோதாக்களை அரசுக்கே திருப்பி அனுப்பியிருக்கிற தமிழ்நாடு ஆளுநரின் ஜனநாயக விரோத செயலை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்!**

இந்திய திருநாட்டின் பன்முகத்தன்மையை சிதைத்திடும் வகையில், எதேச்சாதிகாரத்துடன் இந்தித் திணிப்பை மீண்டும் செயல்படுத்திட, மறைமுக முயற்சியாக 'இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம் போன்றவற்றை இந்தி மொழியில் மட்டுமே இருக்கும் என்ற திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வர முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயல்பாடுகளை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் கே.வி.லோகேஷ் அறிவிப்பு!

திருவள்ளூர், நவ.19-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நாளை (20.11.2023 - திங்கட்கிழமை) பிற்பகல் 2.00 மணியளவில் மீஞ்சூர் எழில் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. இதில் மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல்மாலிக் பங்கேற்று ஆலோசனைகள் வழங்குகிறார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன் பாபு, எம்.முரளிதரன், டி.சங்கர் செ.யுவராஜ், இரா.கதிரவன் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: நவம்பர் 27ல் மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா, டிசம்பர் 17ல் சேலத்தில் நடைபெறும் இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு, நீட் விலக்கு கையொப்பம் இயக்கம் துரிதப்படுத்தல்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.








இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2023) தாய்லாந்தில் 01.12.2023 முதல் 09.12.2023 வரை நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உலகத்திறன் விளையாட்டுப் போட்டியில் (IWAS THAILAND) தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள 24 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக்கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்கு உதவித்தொகையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.38.40 இலட்சத்திற்கான காசோலைகளை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

# தே.மதியழகன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழா வரவேற்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து சிறப்புரை!

### அமைச்சர்கள் துரைமுருகன் - உதயநிதி ஸ்டாலின் - முன்னணியினர் வாழ்த்து!

கிருஷ்ணகிரி, நவ.19-

கிருஷ்ணகிரியில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. மகள் திருமண வரவேற்பு விழா நடைபெறுகிறது



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மகள் ஷிவானி மணமகன் கௌதம் ஆகியோரது திருமணம் கடந்த 1ம் தேதி பெங்களூருவில் நடைபெற்றது. இதனையடுத்து கிருஷ்ணகிரியில் வரவேற்பு விழா வருகிற 22.11.2023 - புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகே உள்ள கலைஞர் அரங்கில் கழக தலைவரும்,

தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.


இந்த வரவேற்பு விழாவிற்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வரவேற்புரை ஆற்ற உள்ளார்

மேலும் அமைச்சர் பெருமக்கள், வாழ்த்துரை வழங்குகின்றனர் .

வரவேற்பு நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர் .

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் நன்றியுரை ஆற்றுகிறார்.



# கலைஞரும் நானும்

45

“யாரைப் பற்றிப் பேசினால் என் நெஞ்சமெல்லாம் நிறையுமோ, யாரைப் பற்றிப் பேசினால் என் கண்கள் கலங்குமோ, யாரைப் பற்றிப் பேசினால் என் நாவின் திறன் கூடுமோ அந்தத் தலைவரைப் பற்றிப் பேசுவது என் பேறு” என முத்தமிழறிஞர் கலைஞருடனான நினைவுகளைப் பகிர்கிறார் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்



“நான் சிறுவனாக இருந்தபோதே முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்திருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் இல்லத்துக்கு வந்திருக்கிறார். என் தந்தையார் இராம சுப்பையா - அம்மா விசாலாட்சி இருவரும் சுயமரியாதை இயக்கக் காலத்தில் இருந்தே இயக்கத்தில் இருந்தவர்கள். தி.மு.கழகம் தொடங்கிய முதல் நாளிலிருந்து அப்பா கழகத்தில் இருந்தவர். எனவே, காரைக்குடியில் நிகழ்ச்சிகளுக்கு வருகிற போது அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் என கழகத் தலைவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அதேபோல், பல பொதுக்கூட்டங்களிலும் கலைஞரைப் பார்த்திருக்கிறேன்.

கலைஞரை நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு அமைந்தது நெருக்கடி நிலை காலத்தில்தான். அதுவரை எம்.ஜி.ஆர் ரசிகனாகவும், ஆதரவாளனாகவும் நான் இருந்தேன். என் நெஞ்சில் இருந்த கதாநாயகன் தீமைகளை எதிர்க்கிறவன். ஆனால், எம்.ஜி.ஆர் நெருக்கடி நிலைக்கு ஆதரவாக இருந்தார். அப்போது கலைஞர் அதை எதிர்த்தார். அதனால், கலைஞர் கதாநாயகனாக உயர்ந்து நின்றார். அந்த நேரத்தில் தலைவர் கலைஞரைச் சந்திக்க அப்பா அழைத்துச் சென்றார். ‘என்னுடைய கடைசி மகன்’ என அப்பா அறிமுகம் செய்து வைத்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் ‘முரசொலி’ வாங்கும் பழக்கமும் எனக்கு உருவானது. எல்லோரும் ‘முரசொலி’ வாங்க அச்சப்பட்ட காலத்தில், நான் அதை எல்லோரும் பார்க்கிறமாதிரி கையில் வைத்துக் கொண்டு செல்வேன். அந்த வயதில் கலைஞர் மீது கொண்டிருந்த ஈர்ப்பின் காரணமாக, அரசியல் சாகச மனநிலையாக அதை நினைத்துப் பார்க்கிறேன்.

> அந்த நிமிடத்தில் இருந்து அவரை என் தந்தையாகவே கருதுகிறேன். அப்போது முதல் கலைஞரும் என்னை மகனைப் போலவே நடத்தினார்.

## ‘இனி’ தொடக்கமும் வருத்தமும்

பிறகு, நீண்ட இடைவெளி. 1983-ஆம் ஆண்டு ஈழத்தமிழர் ஆதரவு இயக்கங்களில் நான் செயல்படத் தொடங்கினேன். 1987-ஆம் ஆண்டு திலீபன் மரணத்துக்குப் பின்னர், ‘ஈழத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு’ என்கிற அமைப்பினை இயக்குநர் வி.சி.குகநாதன், கவிஞர் மு.மேத்தா மற்றும் பல்வேறுபட்ட ஆளுமைகள் இணைந்து உருவாக்கி னோம். அதற்கு நான் ஒருங்கிணைப்பாளராக இருந்தேன். அந்த அமைப்பின் மூலம் பல போராட்டங்களை முன்னெடுத்தபோது கலைஞரை சென்று பார்க்கிறோம்.

சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை பயண நிகழ்ச்சி ஒன்றை, கலைஞர் தொடங்கி வைத்தார். அதன் பின்னர், பாரிமுனையில் இருந்து கிண்டி வரை மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தினோம். அதையும் கலைஞர்தான் தொடங்கி வைத்தார். அதற்கு அடுத்த நாள் எங்களை அழைத்தவர், தி.மு. கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்த உள்ளதாகக் கூறினார்.

அதன் பின்னர், 1991-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி, பிரபாகரன் பிறந்த நாளில் **‘இனி’** என்கிற பத்திரிகையைத் தொடங்கினோம். அந்த ஏட்டுக்கு **‘முரசொலி’**யில் விளம்பரம் கொடுத்தோம். “இது நடுநிலை ஏடு அன்று, எல்லா கடைகளிலும் கிடைக்காது, தமிழ் இன எதிரிகள் இந்த ஏட்டினை வாங்க வேண்டாம்” என அதில் கூறியிருந்தோம். அதைப் பார்த்துவிட்டு தலைவர் கலைஞர் அழைத்தார். “எல்லாமே எதிர்மறை விளம்பரமா இருக்கேப்பா” என்றார். மேலும் “இனி, என்று பெயர் வைத்திருக்கிறீர்களே இது என்ன வினைச்சொல்லா” எனக் கேட்டார். அந்தப் பொருளில் அதுவரை யோசிக்காமல் இருந்தோம். அதன் முதல் இதழ் வந்தபோது, அவர் குறித்து எதிர்மறையாக வந்த கருத்துகளுக்காக என்னை வரவழைத்து, வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்.

## சிறையில் உருவான மனமாற்றம்

அதன் பின்னர் நான் தமிழ் தேசிய அரசியல் செயல்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டதால், ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் கலைஞர் அவர்களுடன் தூரமாகவே இருந்தேன். இன்னும் சொல்ல போனால் பல மேடைகளில் அவரை விமர்சனமும் செய்தி ருக்கிறேன். அதையெல்லாம் அவர் பொருட்படுத்தியதே இல்லை.

1991-ஆம் ஆண்டிலிருந்து 2003-ஆம் ஆண்டு வரை எட்டுமுறை ஈழ ஆதரவுக்காக கைது செய்யப்பட்டி ருக்கிறேன். 2002-ஆம் ஆண்டில் பொடா சட்டத்தில் கைதாகி, ஒன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்தேன். அந்த சிறைவாசம்தான் எனக்குள் மாற்றங்களைக் கொண்டு வந்தது. வலுவான அரசியல் இயக்கம் தி.மு.க.தான், என்கிற முடிவுக்கு வந்தேன். அந்த கால கட்டத்தில் பொடா போன்ற சட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவராக கலைஞர் இருந்ததை மறுக்க முடியாது.

## தந்தையும் மகனுமாக

பிறகு, எனது அரசியல் நிலைப்பாடுகளுக்காக, நான் இருந்த அமைப்புகளில் எதிர்ப்புகள் வந்தன. 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தேன். 2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, தி.மு.க.வுக்கு ஆதரவு நிலை எடுத்து, நான் சார்ந்திருந்த தமிழ் தேசிய அமைப்பில் இருந்து வெளியேறினேன். அப்போது கலைஞரை சந்திக்க ஓர் அழைப்பு வந்தது. “பதினைந்து ஆண்டுகள் அவரை எதிர்த்திருக்கிறேன், அவர் என்ன நினைப்பாரோ” எனத் தயங்கினேன். ஆனால், கலைஞரை சந்திக்கச் செல்லும் அன்று பெரு விருப்பத்துடன் கோபாலபுரம் வீட்டுக்குச் சென்றேன்.

# “என் இரண்டாவது தந்தை..!”

அந்த சந்திப்பின்போது, ஒரு படம் எடுத்துக் கொள்ளலாம் எனப் பேச்சு வந்தபோது தலைவர் கலைஞர் இன்னும் தயாராகவில்லை என அருகில் இருந்தவர்கள் கூறினர். உடனே கலைஞர் “இருக்கட்டும் பரவாயில்ல, உங்க அப்பா இப்படித்தான இருப்பார்” என என்னை அன்பால் நிறைத்து விட்டார். அந்த நிமிடத்தில் இருந்து அவரை என் தந்தையாகவே கருதுகிறேன். அப்போது முதல் கலைஞரும் என்னை மகனைப் போலவே நடத்தினார். அவர் மறைவின்போது என் இரண்டாவது தந்தை இறந்துவிட்டார் என்றே எழுதினேன்.

## காந்தம் இழுத்தத் துகள்!

2006-ஆம் ஆண்டில், நான் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யப்போகிறேன் என்றதும், எந்தெந்த இடங்கள் எனக் கேட்டுக்கொண்டு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். அதேபோல 2009-ஆம் ஆண்டு தேர்தலின்போதும் எனது பயணத் திட்டங்களைக் கேட்டுக் கொண்டு, பிரச்சாரக் கூட்டங்களில் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தார்.

அவரைச் சந்தித்த தொடக்கக் காலத்தில் தயக்கமாகவும், போகப் போக இயல்பாகவும் உரையாடல் நடந்தது. வாரத்தில் இரண்டு நாட்களாவது அவரை சந்தித்து விடுவேன். பரபரப்பான நேரமாக இருக்கும். அந்த நேரத்தில் ஏதாவது ஒரு நூல் குறித்து பேச்சு எழுந்து அப்படியே நீண்டுவிடும். இப்படிப் பல நிகழ்வுகள் நடக்கும். சில நேரங்களில் நானும் அண்ணன் துரைமுருகன் அவர்களும் பேசிக்கொண்டிருந்தால், “என்னய்யா நீங்க மட்டும் தனியா பேசிக்கிறீங்க” என்பார். ஒருமுறை எனது திருக்குறள் விளக்கத்தைக் கேட்டு மிக மகிழ்ச்சியோடு சிலாகித்துப் ‘புதிய விளக்கம்’ எனப் பாராட்டினார்.

2008 -ஆம் ஆண்டு என் அப்பாவின் நூற்றாண்டு விழாவில் அவர் ஆற்றிய உரை என்னை மிகவும் நெகிழவைத்தது. நான் அவரைத் தாக்கிப் பேசிய காலங்களில் என்னை விசாரித்ததுடன், “இராம சுப்பையா அண்ணனின் மகனா என்னைத் தாக்கிப் பேசுவது என அறிந்து என்னால் நம்பவே முடியவில்லை. அதன் பின்னர் அவர் வந்து என்னைச் சந்தித்தபோது காந்தமும் இரும்பும்போல ஒட்டிக்கொண்டோம்” என்றார். நான் அப்போது குறிப்பிட்டேன். “அவர் காந்தம். அவரோடு ஒட்டிக்கொண்ட பல நூறு இரும்புத் துகள்களில் நான் ஒரு துகள்”. அந்தச் சொற்கள் ஆண்டுகள் கடந்தும் நிலைக்கும்.

...பகிர்வார்கள்

## புத்தக வடிவில் ‘பராசக்தி’




தமிழ்த் திரைப்பட உலகத்தைப் புரட்டிப் போட்ட படங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, முத்தமிழறிஞர் கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய ‘பராசக்தி’. படம் வெளியாகி 70 ஆண்டுகளுக்குப் பிறகும், இப்போது பார்த்தாலும் பல அதிர்வலைகளை ஏற்படுத்தும். அந்தப் படத்தின் கதாபாத்திரங்கள், திரையில் பேசிய பல விஷயங்களை, பின்னாளில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அரசுக் கோப்புகளில் இடம்பிடிக்கச் செய்தார் கலைஞர். அதுதான் அவரது பேனாவின் வலிமை.

அந்தப் படத்தின் வசனங்கள், ஒரு தலைமுறையின் பொன்மொழிகள். திரையில் ஜொலிக்கத் துடித்த பலருக்கு மனப்பாடப் பகுதி. பாடலாசிரியர்கள் நீங்கலாக, திரை எழுத்தாளர்களுக்கு எனத் தனித்த மரியாதையை ஏற்படுத்தித் தந்ததில் கலைஞரின் திரைக்காவியங்களுக்குப் பெரும் பங்குண்டு. ஆண்டாண்டு காலமாகப் பார்த்தும் கேட்டும் ரசித்த அந்த வசனங்களை இப்போது படித்துச் சிலிர்க்கவும் முடியும். ஆம்... ‘பராசக்தி’ படத்தின் திரைக்கதை, வசனம் தற்போது அழகிய வடிவத்தில் நூலாகி இருக்கிறது. இதனை ‘டி-ஸ்டாக்’ பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

திரைப்படம் வந்த அந்தக் காலத்திலேயே கதை வசனப் புத்தகமும் வந்தது என்றாலும்கூட, கலைஞரின் சிந்தனைகளும் சாதனைகளும் மிக வேகமாக, பரவலாக எடுத்துச் செல்லப்பட வேண்டிய இந்தக் காலத்தில் இந்தப் புத்தகம் வந்திருப்பது காலத்தின் தேவை!

## :ப்ளாஷ்பேக்



### புகைப்படக்கார உடன்பிறப்பு!



இராமதாஸ்

முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் பெருந்தகை, தலைவர் தளபதி ஆகியோரின் பிறந்த நாட்களின்போது அவர்களது இல்லத்துக்கு வந்து வாழ்த்து சொல்ல வருபவர்களைப் புகைப்படம் எடுப்பது ஓர் உடன்பிறப்பாக எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை வழங்கியது. 1986-ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் புகைப்படம் எடுத்துவிட்டு கீழே வந்தபோது தாழ்வாரத்தில் அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்களை சந்திக்க நேர்ந்தது. ‘உங்களைக் கட்டிப்பிடித்துப் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும்’ என்று அவரிடம் அனுமதி கேட்டதும் மிகச் சாதாரணமாக ஒப்புக்கொண்டதை, இன்றைக்கு நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

**–ஆ.இராமதாஸ், ஆலந்தூர் தெற்குப் பகுதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்!

**1938 ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்பின் முதல் கட்டப் போராட்டம் பெரியார் தலைமையில் தொடங்கியது. சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, தனித் தமிழ் இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்தப் போராட்டம் 1940 ஆண்டு வரை நீடித்தது. இரண்டாம் கட்டப் போராட்டம் திராவிடர் கழகம் சார்பாக, பெரியார் தலைமையில் 1948 — 50 ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது. 1952 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டப் போராட்டம், திராவிடர் கழகம், தி.மு.கழகம் ஆகியவை தனித் தனியாக நடத்தின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 304




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131